Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி-12 | 27-07-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை -160

பொதுசன நூலகம்

27 JUL 2004

மாநகர சபை யாழ்ப்பாணம்

கதிர் (அமல்) பல் மூக்குக் கண்ணாடியகம்
கண் பரிசோதித்து உடன் கண்ணாடி வழங்குதல்
பல் கட்டுதல்
பல்கிளிப்போடுதல்
கிளை: பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு.
அரசஅதிபர் (இல்லம்முன்பாக)
A.9 வீதி, கிளிநொச்சி.
(சி:10015)

# அரச தரப்பில் இருந்து பேச்சுவார்த்தைகுறித்த எத்தகவலும் ஹெல்கேசன் கொண்டுவரவில்லை!

## அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

**இன்று அரச தரப்பில் இருந்து ஹெல்கேசன் அவர்கள் எந்த தகவலும் கொண்டுவர வில்லை. ஏற்கனவே எமது தேசியத் தலைவர் அவர்களை நோர்வே வெளிவிவகார அமைச்சா சந்தித்தபோது நாம் முன்வைத்த நிலைப்பாட்டில் நாம் எந்த மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை. இவ்வாறு நேற்று நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசனுடனான சந்திப்பின் பின்னர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறுகையில்;


**இன்றைய சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் என்ன?*

இன்றைய சந்திப்பில் முக்கியமாக பேச்சுக்களை விரைவில் ஆரம்பிப்பது தொடர் பாகவே பேசப்பட்டது. அத்துடன் தற் போதைய நெருக்கடி நிலை தொடர்பாகவும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை நடை முறைப்படுத்துவது தொடர்பாகவும் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான நிகழ்ச்சி களை தயாரிப்பது சம்பந்தமான விட யங்கள் பற்றியே பேசப்பட்டது.

**எப்போது பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் என்பது பற்றி?*

எம்மைப் பொறுத்தவரை நாம் மீண்டும் எமது பக்க நிலைப்பாட்டை வெளிப்படுத்தி யிருக்கிறோம் அதாவது இடைக்கால நிர்வாக

(12ஆம் பக்கம் பார்க்க)



# தற்போதைய சூழ்நிலையில் சிறியசம்பவங்கள் கூட பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்!

## – நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கேசன்

"தற்போது காணப்படும் ஸ்திர மற்ற காரணிகளை சாதகமான முறையில் இரு தரப்பும் அணுகா விட்டால் சிறிய சம்பவங்கள் கூட பாரதூரமான விளைவை ஏற்படுத் தக் கூடும்.

இவ்வாறு நேற்று அரசியல் துறைப் பொறுப்பாளருடனான சந்திப்பின் பின் நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாங்கள் பல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடினோம். நாம் அரசாங்கத்தின் செய்தியை அதாவது நேற்று அரசாங்கத்தின் சமாதான செயலகப் பணிப்பாளர் கலந்துரையாடியது குறித்த செய்தி யைக் கொண்டு வந்தோம். பாது காப்பு, பொருளாதாரம், சமாதான முயற்சிகளை மீள ஆரம்பித்தல் தொடர்பானவையே அவை. இந்த விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை கள் நடாத்தப்பட்டுவருவதால் இது குறித்து விரிவாகக் கூற நான் விரும்பவில்லை. கொழும்பு திரும் பியவுடன் மேலதிக கலந்துரை யாடலை மேற்கொள்ளவுள்ளேன். சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டு மாயின் சமாதான நடவடிக்கைக ளும், போர் நிறுத்த உடன்பாடும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

கொழும்பு திரும்பியதும் சமா தானச்செயலகச் செயலாளருடன்

(12ஆம் பக்கம் பார்க்க)

# கடவத்தை விகாரையில் பிக்கு அசிற் வீச்சில் பலி

(கொழும்பு)

கடவத்தையிலுள்ள விகாரையொன்றின் பௌத்த பிக்கு அசிற் வீச்சி னால் பலியானார். நேற்று மாலை 6.30 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தின் போது இனந்தெரியாதோரின் அசிற் வீச்சினால் படுகாய மடைந்த மேற்படி பிக்கு மரணமானார்.

ஜாதிகஹெல உறுமயவில் பௌத்த பிக்குகள் பாராளுமன்ற அரசியலில் நேரடியாகப் குதித்த பின் பிக்குக்கள் மீதான வன்முறைகள் அதிகரித்துள்ளன. இவை தனிப்பட பகை காரணமாகவா அல்லது அரசியல் கொலைகளா என்பது குறித்துத் தெரியவில்லை இவ்வாறு வன்முறையில் மூன்று பிக்குகள் கொல்லப்பட்ட போதும் பூரண விசாரணைகள் நடத்தப்படாமையால் இது குறித்து முடிவிற்குவர முடிய வில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (32)

# கொழும்பில் மீண்டும் பாதுகாப்பு நடைமுறைகளை அமுல்படுத்த படை அதிகாரிகள் தீர்மானம்

கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பாதுகாப்பை பலப்படுத்த 15 அம்சத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதென நேற்றுக் கூடிய பாது காப்பு அதிகாரிகள் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சில் சுமார் 3 மணித்தியாலங்களாக நடை பெற்ற இக்கூட்டத்தில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் திலக ரணவிராஜா பொலிஸ்மா அதிபர், கொழும்பு மாவட்டத்திற்கு பொறுப் பான இராணுவ அதிகாரி ரஞ்சித் சில்வா, 4 பொலிஸ் பிரதிமா அதிபர்கள் பங்கேற்றனர். நேற்று முன்தினம் கொழும்பு கொட்டாவ பகுதியில் இடம் பெற்ற சம்பவத் தால் கொழும்பு பகுதிக்கு பாது காப்பு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டி ருப்பதாக இக்கூட்டத்தில் தெரிவிக் கப்பட்டிருக்கிறது எனவே அதனை சமாளிக்கும் 15 அம்ச திட்டங்களை நடைமுறைப்படுத்துவது என்ற தீர்மானம் நேற்று மேற்கொள்ளப் பட்டது. இதற்காக போர் நிறுத்த உடன்பாட்டுக்கு பின்னர் கொழும் புக்கு வந்தவர்கள் மீது விஷேச கவ னம் செலுத்துவது என்று இணங்

(12ஆம் பக்கம் பார்க்க)

# மட்டு ஈரப்பெரிய குளத்தில் இனம் தெரியாத பொருள் வெடித்து

## - சிறுவன் பலி; இருவர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஈரப்பெரிய குளத் தில் நேற்று முன்தினம் இனந்தெரி யாத பொருள் ஒன்று வெடித்ததில் சிறுவன ஒருவர் அந்த இடத்திலேயே பலியானார் மேலும் இருவர் படு காயமடைந்துள்ளனர்.

மேற்படி இனந்தெரியாத பொருளை எடுத்த சிறுவன் அதனை வீசி எறிந்தபோது அது பாரிய சத்தத்துடன வெடித்துச் சிதறியது இதனால் அதனை வீசி எறிந்த அருளானந்தம்- புவனேந்திரன் என்ற சிறுவனே பலியானவராவார்.

பூபாலப்பிள்ளை தவமலர் (வயது 30) இராசதுரை ஜெயந்திரன் (வயது 11)என்ற இருவருமே படுகாயமடைந் தவர்களாவர்.இதேவேளை மட்டக் களப்பு கிரான் புலிபாய்ந்த கல்லில் மிதி

(12ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க ராஜாங்க அதிகாரி இவ்வாரம் இலங்கை வருகிறார்

அமெரிக்க இராஜங்க அமைச்சின் தெற்காசியாவிற்கான இரா ஜாங்க செயலர் டொனால்ட் ஏகாம் இந்த வாரம் இலங்கைவர இருக் கிறார். இது தெற்காசிய நாடுகளிற்கான வழமையான பயணம் என கருதப்பட்டாலும் கூட முக்கிய பலதரப்பினரையும் சந்திக்க இருப்பதாக வும் தெரியவருகிறது. இதன்பின் இந்தியா செல்லும் இவர் இந்தியாவில் பல முக்கிய ஸ்தர்களையும் சந்திக்க இருக்கிறார். தற்போதைய சூழ்நிலையில் இலங்கைக்கான இவரின் விஜயம் முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது. (32)

# விவசாயிகள், கால் நடை உற்பத்தியாளர் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை

## - பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

விவசாயிகளும், கால்நடை உற்பத்தியாளர்களும் எதிர்நோக் கும் பிரச்சினைகள் தொடர்பாக தமி ழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறு வனத்தினர் கவனத்தில் கொண்டு அதற்குரிய சில நடவடிக்கைகள் உறுதிபட மேற்கொள்ளப்படும் என மக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இதற்குரிய முடிவுகளை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் மற்றும் தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி, அத்துறைசார்ந்த பொறுப்பாளர்கள் பொருண்மிய மேம்பாட்டு பொறுப்பாளர் கரிகா லன் பொருண்மிய மேம்பாட்டு நிறு வனத்தின் துணைப் பொறுப்பாளர் ஆகியோர் கடந்த சனிக்கிழமை கலந்து ஆலோசித்தே முடிவுகள் எடுக்கப்பட்டதாக தமிழீழ பொருண் மிய மேம்பாட்டு பொறுப்பாளர் கரிகாலன் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் எடுக்கப் பட்ட முடிவுகளாக கால்நடை உற் பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி எடுத்த முடி வாக கால்நடை உற்பத்தியாளர்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## -யாழ்.மாவட்டத்தில்

# படையினரால் கைதாகி காணாமற் போனோர்

## குறித்த விசாரணை இரு தினங்கள் நடைபெறும்

1996 மற்றும் 97ஆம் ஆண்டுக் காலப் பகுதிகளில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போன தமிழ் இளைஞர்கள் சிலரது பெற்றோரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளஆட்கொணர்வு மனு மீதான விசாரணைகள் நாளையும் நாளை மறுதினமும் இடம் பெறவுள்ளது.

யாழ்.நகரின் அரியாலைப் பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போன இளைஞர்கள் சிலர் தொடர்பாக யாழ்.நீதி மன்றிலும் அதேபோன்று தென்மராட்சியில் நாவற்குழிப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போன இளைஞர்கள் தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றிலும் விசாரணைகள் இடம்பெறவுள்ளன.

குறிப்பாக கைதடி நாவற்குழிப் பகுதியில் ஒரு கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் பலரைக் கைதுசெய்து கொண்டு சென்றதாகக் குற்றம் சாட்டப்படும் படை அதிகாரியான "டுமிந்தஹெப் பற்றிக்கொலாவ" எதிர்வரும் வியாழனன்று சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்காக ஆஜராகலாமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

தற்போது பலாலி இராணுவப் படைத்தளத்தில் கடமையாற்றிவரும் இவர் முதலாம் எதிரியாகக் குறிப்பிடப்பட்டுள்ள போதும் கடந்த ஆறு மாதங்களாக நீதிமன்றில் ஆஜராகாதுஇருந்து வந்தார். எனினும் நீதிமன்றில் விசாரணைக்கு ஆஜராகுமாறு சாவகச்சேரி நீதவான் கடும் உத்தரவொன்றை அண்மையில் பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (27)

# பாடசாலை நேரத்தில் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடக் கூடாது

## -வன்னி சிறிலங்கா இராணுவத்தளபதி

பாடசாலை நேரத்தில் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள என்பவற்றில் ஈடுபடக் கூடாது என வன்னி மாவட்ட இராணுவத தளபதி மேஜர் ஜெனரல் சிசிரவிஜே சூரிய தெரிவித்துள்ளார்.

பாடசாலை நேரத்தில் மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளிலேயே ஈடுபட வேண்டும் அதனை விடுத்து பாடசாலை நேரத்தில் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் என்பவற்றில் ஈடுபடுவது.சட்டத்தை மீறும் செயலாகும் இதனால் மாணவர்களின் கல்வி பாதிப்படையும், கல்வியை நாம் என்றுமே இழக்கக்கூடாது பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட மாணவர்களுக்கு உரிமை உண்டு என்றார்.

அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயம், சிறிராபுரம் திருஞான சம்பந்தர் வித்தியாலயம், காத்தார் சின்னக்குளம் ஆகிய பாடசாலைகளுக்கு முன்பாக பொலிசாரும், இராணுவத்தினரும் ஏன் கண்காணிப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர். என எமது செய்தியாளர் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே இராணுவத்தளபதி இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில் கிராமப்புறப் பாடசாலைகளில் இருந்து சிலமாணவர்கள் இதில் வற்புறுத்தல்களின் அடிப்படையில் ஈடுபடுத்தப் படுகின்றன.. இதனைத் தவிர்ப்பதற்காகவே பாடசாலைகளுக்கு முன்பாகப் படையினர் கண்காணிப்புப் பணியில் ஈடு பட்டுள்ளனர் என்றாா. (10)

# கிளி.மருத்துவமனையில் நாளை கண் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

கண்வைத்திய நிபுணரினால் கிளி. மாவட்ட வைத்தியசாலையில் நாளை கண்பரிசோதனை நடைபெறவுள்ளது.

வவுனியா பொது மருத்துவமனையில் பணிபுரியும் கண் வைத்திய நிபுணரினால் கண்பரிசோதனை மேற்கொள்ளவுள்ளாதினால பரிசோதனை மேற்கொள்ளவுள்ளவர்கள் கிளிமாவட்ட வைத்தியசாலையில் உடன் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளும் வண்ணம் கிளிநொச்சி மருத்துவ சங்கத்தினர் வேண்டியுள்ளனர். (சோ.கு)

# வவு.பல்கலை மாணவர் அ.சபை புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சை

(வவுனியாசெய்தியாளர்)

வவுனியா மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்திச் சங்கம் வருடந்தோறும் நடாத்தும் தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்டப் பாடசாலைகளில் இருந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களும் இம் முன்னோடிப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளதாக பரிட்சை ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (10)

# பயணிகளுக்கு இடையூறாக கட்டாக்காலி மாடுகள்

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேசத்தில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளதால் மக்கள் அவலப்படுவதுடன் பயணிகள் படுகாயப்பட்டும் வருகின்றனர்.

மேற்படி பகுதியில் தண்ணீரூற்று, ஆலடிச்சந்தி, வற்றாப்பளை றான்ஸ்போமர் சந்தி மகாவித்தியாலயவீதி, முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையடி மாவீரர் துயிலும் இல்லத்தடி, பொதுச்சந்தையடி காட்டு விநாயகர் கோயிலடி, ஆகிய பகுதிகளில் கூட்டம் கூட்டமாக இரவு வேளைகளில் கிடப்பதால் இரவில் செல்லும் துவிச்சக்கர வண்டிகள் மாடுகளில் மோதி பயணிகள் காயப்பட்டுள்ளதுடன், பாதசாரிகள் செல்லும் போது மாடுகள் இடிபட்டு பாதசாரிகளை தாக்கிய சம்பவமும் நடைபெற்று வருகிறது. கடந்த சனியன்று முள்ளியவளை 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இ.சிவசீலன் என்பவர் மாடுகளால் தாக்கப்பட்டு பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# கிளி.தமிழ்ச்சங்கம் நடாத்திய தமிழ் கலைத்திறன் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தால் கிளிநொச்சி மாவட்டப் பள்ளிகள் மத்தியில் 2004.07.18 ஆம் நாள் நடாத்தப்பெற்ற தமிழ்க் கலைத்திறன் போட்டிகளில் பின்வ்ருவோர் வெற்றியீட்டியுள்ளனர். இவர்களுக்கான பரிசில்கள் செப்ரெம்பர் திங்களில் கொண்டாடப் பெற இருக்கும் திருக்குறள் மாநாடடில் வழங்கப்பெறும். இப்போட்டிகளில் 300 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

நாவன்மை:-பிரிவு "A"1ஆம் இடம் செல்வி.ஆ.சர்மிலா கனகாம்பிகைக்குளம் அ.த.க.பள்ளி, 2ஆம் இடம் செல்வன்.ஐ.கரிராம் இராமநாதபுரம்-மேற்கு அ.த.க.பள்ளி, 3ஆம் இடம் மு.கீர்த்தனன் கனகபுரம் உ.நி.ப.பிரிவு "இ"1ஆம் இடம் யெ.ஜெயமாருதி இராம நாதபுரம் உ.நி.ப, 2ஆம் இடம் சீ.கீர்த்திகா இராமநாதபுரம் உ.நி.ப, 3ஆம் இடம தி.சிறிரஜீவன், ச.வேனியன் கிளி. இந்துக்கல்லூரி, ச.சங்கீதா முருகானந்தா உ.நி.ப.

பிரிவு "ஆ"1ஆம் இடம் செ.தாரணி இராமநாதபுரம் உ.நி.ப,2ஆம் இடம் த.துளசிகன் கிளி/மத்திய கல்லூரி, 3ஆம் இடம் தி.சிறிரயீவன் கிளி/இந்துக் கல்லூரி.பிரிவு "அ"1ஆம் இடம் மு.கோகிலராணி கறுக்காய்த்தீவு அ.த.க.பள்ளி குறளிசை (குழு) 1ஆம் இடம் கிளி/கனகபுரம் உ.நி.ப, 2ஆம் இடம் கிளி/இராமநாதபுரம் உ.நி.ப, 3ஆம் இடம் கிளி/கிளிநொச்சி உ.நி.ப.

தமிழ்ச் சங்கப்பாடல் (குழு) 1ஆம் இடம் இராமநாதபுரம் உ.நி.ப, 2ஆம் இடம் இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பள்ளி, 3ஆம் இடம் தருமபுரம் உ.நி.ப.

நாடகம்1ஆம்இடம் முருகானநதா உ.நி.ப, வீரத்தாய் நாடகம்.

கபடி1ஆம் இடம் கிளி/தருமபுரம உ.நி.ப.

வினாடிவினா 1ஆம் இடம் கிளி/தர்மபுரம் உ.நி.ப.

# ஆரையம்பதியில் இளைஞருக்கு காலில் துப்பாக்கிச் சூடு

(மட்டக்களப்பு)

ஆரையம்பதியில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான இளைஞர் ஒருவர் காலில் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.நேற்றிரவு 8.15 மணியளவில்நடந்த இச்சம்பவத்தின் போது இவரது வீட்டிற்குச் சென்ற ஆயுததாரிகள்இவரைக் கூப்பிட்டு காலில் சுட்டுவிட்டுச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

இவர் தினமுரசு பத்திரிகைக்கு செய்திகள் வழங்குபவர் என தெரிவிக்கப்படுகிறது.

# பாரதி முன்பள்ளிக் கட்டடம் நேற்றுத் திறந்து வைப்பு

(அலுவலக செய்தியாளர்)

டென்மார்க் தமிழர் கலாசாரத்தின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் வவுனியா வடக்கு






நெடுங்கேணி அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தால் கனகராயன் குளத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பாரதி முன்பள்ளி நேற்றுக்காலை 10.00 மணிக்கு சம்பிரதாய பூர்வமாக நாடாவெட்டித் திறந்து வைக்கப்பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வான மங்கல விளக்கினை வவுனியா வடக்குப் பிரதேச செயலர் ஐயம் பிள்ளை வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், புளியங்குளப் பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் திலீப், கிராமசேவகர் தணிகாசலம் ஆகியோர் ஏற்றிவைத்தனர். அடுத்துத் தமிழீழத் தேசியக் கொடியினை வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானவேல் ஏற்றிவைக்க தொடர்ந்து நிறுவனக் கொடியும், முன்பள்ளிக்கொடியும் ஏற்றப்பட்டது.

அடுத்து பாரதி முன்பள்ளி பெயர்ப் பலகையினை பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் திரைநீக்கம் செய்து வைத்தார். அடுத்து முன்பள்ளிக் கட்டடத்தினை தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

தொடர்ந்து சிறப்புரையினை றெஜி, கிஷோர், ஞானவேல், ஐயம்பிள்ளை ஆகியோர் ஆற்றினர். இதில் பெற்றோர்கள், பொதுமக்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (சோ,கு)

# கிணற்றுக்குள் நின்ற வேளை கல் விழுந்து குடும்பஸ்தர் காயம்

(முள்ளியவளை)

கிணற்றுக்குள் நின்ற வேளை கல் வீழ்ந்து 5 பிள்ளைகளின் தந்தை படுகாயமடைந்த சம்பவம் கடந்த வெள்ளியன்று பி.ப.4.30 மணிக்கு முள்ளியவளைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக படுகாயத்திற்குள்ளான 3 ஆம் வட்டாரம் முள்ளியவளையைச் சேர்ந்த வே.மெய்யழகன் என்பவர் தெரிவிக்கையில;

கிணறு கட்டுவேலை நடைபெற்றுக் கொணடிருந்தபோது கட்டுக்காக மேலிருந்து கிணற்றுக்குள் கல் இறக்கும் போது கயிறு அறுந்து கல் கிணற்றுக்குள் நின்ற தனது தலைமேல் வருவதை அவதானித்து தனது கையால் தலையை மூடிய போது கல்லு கைமேலும் தோளிலும் வீழ்ந்ததாகவும் தலையில் கைவைக்க தவறியிருந்தால் தனது தலைமேல் வீழ்ந்து தான் மரணமடைந்திருக்க வேண்டிவந்திருக்கும் எனத் தெரிவித்தார்.

மேற்படி நபர் முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ஆ)


## பணிநிலை வேண்டுகை

**பணிநிலை:-கணனி இயக்குனர்**
(I,T உட்பட எல்லாம் தெரிந்தவராகவும் ஒரு வருடதிற்கும் குறையாத அனுபவம் இருத்தல)

**கல்வி:-** க.பொ.த. உயர்தரத்தில் சித்தி அடைந்தவர் அல்லது அதற்கு மேல்

**சம்பளம்:-** நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

**குறிப்பு:-**ஆங்கிலப்புலமை அவசியம், 31.07.2004 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

தலைமைப்பணிமனை,
நலவாழ்வுஅபிவிருத்தி நிறுவனம்,
கிளிநொச்சி. (சி.10039)

பணிப்பாளர்,
நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்.

## கேள்வி அறிவித்தல்–நிர்மாண வேலைகள்

ஐ.எவ்.பி.இல/எம்யு/டி.பி.டி.ஏச்.எஸ்/பி.எஸ்.டி.ஜி/எச்.டபிள்யூ/01 இலக்க 21.07.2004இல் ஈழநாதம் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் விளம்பரத்தின் இரண்டாவது பந்தியில் தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

மேற்படி பந்தியில் 20.07.2004 என்ற திகதி தவறானது. 20.08.2004 என்பதே சரியானதாகும். எனவே இதனைக் கருத்தில் கொள்ளுமாறு ஒப்பந்தக்காரர் வேண்டப்படுகின்றீர்கள்.

(சி.குணசிங்கம்)
திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர்,
அரசாங்க அதிபருக்காக,
கச்சேரி, முல்லைத்தீவு.

(சி-9169)

# பங்களாதேஷில் வரலாறு காணாத வெள்ளப்பெருக்கு

# நாட்டின் முக்கால் பங்கு நிலப்பரப்பு நீரில் மூழ்கியது

## இருநூறிற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

(டாக்கா)

**பங்களாதேஷில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக வரலாறு காணாத வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் நாட்டின் முக்கால் பங்கு நிலப்பரப்பு நீரில் மூழ்கியுள்ளது. இருநூறிற்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளனர்.**


20 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். தலை நகர் டாக்காவில் நாற்பது வீதமான பகுதி நீரில் மூழ்கியுள்ளது.

பங்களாதேஷில் உள்ள நதிகள் இதுவரை காணாத அளவிற்கு அதியுயர் நீர்மட்டத்தை எட்டியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. பங்களாதேஷ் பிரதமர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று நிவாரணங்களை வழங்கியுள்ளதுடன் மக்களுக்கு ஆறுதல்களையும் தெரிவித்துள்ளார்.

இருந்த போதிலும் போக்குவரத்துக்கள் தொலைத்தொடர்பு மின்சார விநியோகம் போன்றன துண்டிக்கப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்து முகாங்களில் தங்கியுள்ள மக்கள் உணவு நெருக்கடியை மோசமாக எதிர்கொண்டுள்ளனர். இம்மக்கள் மத்தியில் தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இடம் பெயர்ந்துள்ள பெருந்தொகையான மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பங்களாதேஷ் அரசு பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. அடுத்து வரும் கிழமைகளிலும் தொடர்ந்து மழை பெய்யும் என எதிர்வு கூறப்பட்டுள்ள நிலையில் நிலைமை மிகவும் மோசமாகலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.



வெள்ளப்பெருக்கேற்பட்டுள்ள பங்களாதேஷில் புடைவைத்தொழிற்சாலை ஒன்றில் கடமையாற்றும் ஊழியர்கள் படகு மூலம் தொழிற்சாலைக்கு செல்கின்றனர்.



கராச்சியில் குண்டுவெடிப்பிற்குள்ளான வாகனத்தைப் பரிசோதிக்கும் பொலிசார்.

# உள்நாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காணாவிட்டால் சூடான் மீது பொருளாதாரத்தடை விதிக்கப்படும்

## -அமெரிக்கா, ஐரோப்பா எச்சரிக்கை

சூடானில் டார்மர் பகுதியில் இடம்பெறுகின்ற உள்நாட்டு மோதல்களுக்கும், வன்செயல்களுக்கும் சூடான் அரசு இயன்றளவு விரைவில் தீர்வு காணாவிட்டால் அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடைகள் கொண்டுவரப்படுமென அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சூடான் சனாதிபதி இதற்கு கருத்துத் தெரிவிக்கையில் ஆபிரிக்க யூனியன் நாடுகளதும் சர்வதேச சமூகத்துடனும் இணைந்து பணியாற்ற சூடான் அரசு தயாராகவுள்ளதெனத் தெரிவித்துள்ளார். அதேவேளை ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் டார்மர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமெனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அமெரிக்கா ஏற்கனவே நகல் தீர்மானம் ஒன்றை தயாரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. டார்பர் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணாது விட்டால் சூடான் மீது பாதுகாப் புச்சபை பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என்ற வகையில் அமைந்துள்ள அமெரிக் காவின் இந்நகல் பிரேரணை பாது காப்புச் சபைக்கு அனுப்பிவைக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை டார்பர் பிரச்சினைக்கு சூடான் அரசு தீர்வு காணத்தவறினால் அந்நாட்டின்மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படுவதைத் தவிர்க்க முடியாதிருக்குமென ஜேர்மன் மற்றும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர்கள் தொலைபேசி மூலம் நடத்திய கலந்துரையாடலில் தெரிவித்துள்ளனர். நெதர்லாந்தும் இக் கருத்தையே வெளியிட்டுள்ளது.

# காஸாவிலுள்ள இஸ்ரேலியரை இடம்மாற்றும் முடிவுக்கு எதிர்ப்பு

(டெல்அவிவ்)

பலஸ்தீனப் பகுதியில் வசித்து வருகின்ற இஸ்ரேலியர்களை வேறு பகுதியில் குடியமர்த்துவதற்கு இஸ்ரேல் அரசாங்கம் முடிவு செய்திருப்பதைக் கண்டித்து ஒரு இலட்சத்திற்கும் அதிகமான இஸ்ரேலியர் நேற்று முன்தினம் மனிதசங்கிலிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இஸ்ரேல்-பலஸ்தீனத்திற்கிடையேயான பிரச்சினை தொடர்கின்றமையால் காஸாவில் வசித்து வருகின்ற இஸ்ரேலிய மக்கள் மீது பலஸ்தீனத் தீவிரவாதிகள் திடீர் திடீரெனத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதனால் அங்குள்ள மக்களைப் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்த இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் முடிவெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் தொடங்கியுள்ளதைத் தொடர்ந்து ஜெருசலேம் அருகே மனிதசங்கிலிப் போராட்டம் நடைபெற்றுள்ளது.


இப்போராட்டத்தின்போது காஸாப் பகுதியில் இருக்கின்ற இஸ்ரேலிய மக்களை வேறு இடத்தில் குடியமர்த்துவதை எதிர்த்து இஸ்ரேல் நாட்டுக்கொடிகளை ஏந்திய வண்ணம் கோஷங்கள் எழுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ரமல்லாவில் அரேபிய தூதரகத்தின் உயர் அதிகாரிகளைச் சந்தித்து விடைபெறும் பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத்



காஸா நகரில் இஸ்ரேலிய எறிகணைத் தாக்குதலில் காயமடைந்த சிறுவனை அவரது தந்தை வைத்தியசாலைக்கு கொண்டு செல்கிறார்.



அவுஸ்திரேலியப் படைவீரர் ஒருவர் ஈராக்கில் கடமையில் ஈடுபட்டிருப்பதை இங்கே காணலாம்.

## -அடுத்தடுத்து ரயில் விபத்து-

# போக்குவரத்து அமைச்சருக்கெதிராக துருக்கியில் மக்கள் போர்க்கொடி

(இஸ்தான்புல்)

துருக்கி நாட்டின் முக்கிய நகரங்களான ஹங்காரா மற்றும் இஸ்தான்புல்லை இணைக்கும் வகையில் அதிவேக ரயில் அண்மையில் சேவைக்கு விடப்பட்டது.

இந்த ரயில் அறிமுகமான மூன்றாவது நாளிலேயே ரயில் பாதையிலிருந்து விலகியதன் காரணமாக ஏற்பட்ட விபத்தின்போது 37பேர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் அதிவேக பயணிகள் ரயில் ஒன்று நேற்று முன்தினம் துருக்கியின் மேற்குப் பகுதியினைக் கடக்க முயன்றபோது பேருந்து ஒன்றின் மீது எதிர் பாராமல் மோதியதில் அந்த ரயிலில் பயணம் செய்தவர்களில் 12பேர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அடுத்தடுத்து நிகழ்ந்துவரும் இத்தகைய ரயில் விபத்தினால் ஆவேசமடைந்த துருக்கி மக்கள் அந்நாட்டுப் போக்குவரத்து அமைச்சரைப் பதவி விலகும்படி வலியுறுத்தியுள்ளதுடன் ரயில்வே அதிகாரிகளுக்குகெதிராகவும் போர்க் கொடி தூக்கியுள்ளனர்.

## பாக். பிரஜைகள் இருவர் கடத்தல்

(பாக்தாத்)

ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட இரு பாகிஸ்தானியர்களும் பணியாற்றி வரும் கம்பனியை மூடாவிட்டால் இரு பாகிஸ்தானியரும் கொலை செய்யப்படுவார்கள் என தீவிரவாதிகள் நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்த இரண்டு பாகிஸ்தானிய பிரஜைகளும் ஈராக்கில் கம்பனியொன்றில் வேலை செய்து வந்தார்கள் என்றும் அவர்கள் தற்போது தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் என பாகிஸ்தானிய அதிகாரி தெரிவித்துள்ளார். அவர்களை விடுவிப்பதற்கு இயன்ற முயற்சியை பாகிஸ்தான் எடுக்கும் என கடத்தப்பட்டவர்களின் உறவினர்களுக்கு பாகிஸ்தான் அரசு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

# பொருளாதார உலகமயமாக்கல் சகல மக்களதும் ம.உரிமைகளைப் பேணுவதாக இருக்க வேண்டும்

## -ஜேர்மன் வெளியுறவுத்துறை அமைச்சர்


(சென்னை)

சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களினதும் மனித உரிமைகளைப் பேணுவதாகப் பொருளாதார உலக மயமாக்கல் இருக்க வேண்டும் என்று ஜேர்மன் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோஸ்க் காட்பெஷர் கூறியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற "உலகமயமாக்கலும் அடையாளமும்" எனும் கலந்தாய்வுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்தியாவும், சீனாவும் பெரும் சக்திகளாக உருவெடுத்துள்ளதாகக் கூறிய அவர் சீனாவின் பொருளாதார வளர்ச்சி அபரிமிதமானது என்றும் அவர் கூறியுள்ளார்.

# மண்கிண்டி மலை முகாம் வெற்றித் தாக்குதல் சிங்களப்படைகளின் அச்சத்தை அதிகரித்தது

## கடற்புலிகளின் முல்லை. மாவட்ட அரசியல் பொறுப்பாளர்



(அலுவலக செய்தியாளர்)

**மண்கிண்டிமலையில் நிலை கொண்டிருந்த சிங்களப்படைகள் எமது மக்கள் மீது மேற் கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல் களைக்கண்டுஅவற்றுக்குமுற்றுப்புள்ளி வைத்து மக்களுக்கு விடுதலை அளிப்பதற்காகவே தான் மண்கிண்டி இராணுவ முகாம்மீது தாக்கு தல் நடத்த வேண்டும் என்றதிட்டத்தை தேசியத் தலைவர் வகுத்தார். இவ்வாறு கடற்புலிகளின் முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் ரங்கன் தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் அமைந்துள்ள 'இதயபூமி' வெற்றிச்சமரில் வீர காவியமான பத்து மாவீரர்கள் நினைவாக அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலயத்தில் நடைபெற்ற இதயபூமி தாக்குதல் வெற்றிவிழா நிகழ்வில் கலந்துசிறப்புரை ஆற்று கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், எமது தாயகவிடுதலைப் போராட் டத்தில் இன்றைய நாள் ஒரு வித்தியாசமான நாள் தமிழீழத்தின் இதயத்தில் நிலை கொண்டு எமது மக்களின் வாழ்வைச்சிதைத்து சின் னாபின்னமாக்கி வந்த சிறிலங்கா படைகளை மண்கிண்டிமலையில் வைத்து எமது போராளிகள் தாக்கி சின்னாபின்னமாக்கினர். எதிரி தலைதெறிக்க ஓடினான். இந்த முகாமை வெற்றி கொண்டு எமது மக்களுக்கு நின்மதியான வாழ்வை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக வெயில்,பனி, மழை,ஓய்வு, உறக் கம் என்பன அத்தனையும் துறந்து செயல்பட்டதன் காரணத்தால் தான் நாம் இந்த முகாமை வீழ்த்தி னோம். அப்போதையசூழலில் நாம் இந்த முகாமை வெற்றி கொண்ட தனால் எம்மீது எதிரிகொண்டி ருந்த அச்சத்தை மேலும் அதிகரிக் கச் செய்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ,தீ,20)

# விசர்நாய்க் கடிக்கு இலக்காவோர் முல்லை.மாவட்டத்தில் அதிகரிப்பு

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசர் நாய்க்கடிஅதிகரித்துள்ள அதேவேளை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் விசர்நாய்க் கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வருவோர் தொகையும் அதிகரித்துள் ளது.மேற்படி வைத்தியசாலைக்கு நாள் ஒன்றுக்கு சில வேளைகளில் மூன்று பேர் விசர்நாய்க்கடிக்கு இலக்காகி சிகிச்சைக்காகச் செல்வதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஆ)



வவுனியா மாவட்ட விடியல் இசைக்குழுவினரின் 'தாய் மடியின் தாலாட்டு' பாடல் இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வு சனிக்கிழமை வவுனியா இறம்பைக்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற போது அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் கலைஞர் ஒருவரைக்கௌரவிக்கின்றார். படம்:-செல்வா

# மதிய உணவு வழங்கல்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேச பாடசாலைகளில் மாணவர்களுக்கு கடந்த 19ஆம் திகதியிலிருந்து மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

தரம் 02 தொடக்கம் 11 வரையிலான மாணவர்களுக்கு யுனிசெப் நிறுவனத்தினரால் இத்.திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத் திட்டத்தினால் பாடசாலைகளில் நடைபெறுகின்ற மாலை நேர வகுப்புக்களுக்கு மாணவர்கள் கவனம் செலுத்துகின்றனர் என பாடசாலைகளின் ஆசிரியர்கள் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (12)

# ஆசிரியர் வாண்மை விருத்தி தினம் -2004 மட்டக்களப்பில் நடைபெற ஏற்பாடு

## கிளிநொச்சியிலும் விரைவில் நடைபெறும்

(கண்டாவளை)

வடக்கு,கிழக்கு மாகாணத்திலுள்ள 25 ஆசிரிய மத்திய நிலையங்கள் இணைந்து நடாத்தும் 2004ஆம் ஆண்டிற்கான ஆசிரியர் வாண்மைவிருத்தி தினம் மட்டக் களப்பில் எதிர்வரும் 30,31ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

அதேவேளை இந்நிகழ்வு யாழ். மகளிர் இந்துக்கல்லூரியில் கடந்த 10,11 ஆம் திகதிகளில் நடைபெற் றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்மை விருத்தி செயற் பாட்டின் போது பதினொரு அறி வுத்தொகுதிகள் அமைக்கப்பட்டு பல்கலைக்கழகம், கல்வியற் கல்லூரி, மாகாணகல்வித்திணைக் களம் G.T.Z. நிறுவனங்களும் ஏனைய 7 தொகுதிகளும் ஆசிரிய நிலைய முகாமையாளர்களாலும் நெறிப்படுத்தப்படவுள்ளன. இதில் சுமார் 400 ஆசிரியர்கள் இரண்டு நாள் பயிற்சியில் ஈடுபடவுள்ளனர். இங்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயங்கள் இணைந்து செயற்படவுள்ளதாக இராமநாதபுரம் ஆசிரிய மத்திய நிலை முகாமையாளர் செந்தில் வடிவேல் தெரிவித்துள்ளார்.

மேலும் கிளிநொச்சியிலும் விரைவில் ஆசிரியர் வாண்மை விருத்தித்தினம் ஏற்பாடு செய்யப் படும்எனவும்அறியவருகிறது. (14)

# ஐந்து வீதிகள் புனரமைப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் புனர்வாழ்வு புனரமைப்புத்திட்டத்தின் கீழ் ஐந்து வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

பண்டாரிக்குளம்கந்தபுரம் வீதி (1.7கிலோமீற்றர்) 3.8மில்லியன் ரூபாவிலும்,புதூர் - நவ்வி வீதி(1.5 கிலோமீற்றர்) 1.8மில்லியன் ரூபா விலும் சின்னடம்பன்குடியிருப்பு உள்ளகவீதி (ஒருகிலோமீற்றர்) 0.8 மில்லியன் ரூபாவிலும்,

ரன்கெங்கம உள்ளகவீதி (2கிலோமீற்றர்) 1.2 மில்லியன் ரூபாவிலும் வெடிவைத்த கல்-நாவலர் வீதி (3கிலோமீற்றர்) 1.6 மில்லியன் ரூபாவிலுமாக மொத்தமாக ஒன்பது மில்லியன் ரூபாவில் இவ்வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களப் பிரிவில் சிறுபோக நெற்செய்கை நீர் வழங்கலில் தாமதம்!

## நெற்பயிர் அழிவைத் தடுக்க அவசர வேண்டுகோள்

வவுனிக்குளத்தின் கீழ் 2004 சிறுபோக நெற்செய்கையை மேற் கொள்ளும் ஒரு பகுதி விவ சாயிகள் குளத்திலிருந்து உரிய வகையில் நீர் கிடைக்காமையால் பெரும் இழப்பை சந்தித்துள்ளனர்.

திருவள்ளுவர் நகர் யோகபுரம் "டி' வாய்க்கால் குழு 12இல் செய்கை பண்ணப்பட்ட 110 ஏக் கரில் ஒரு பகுதி நெற்செய்கை நீர் பற்றாக்குறையால் முற்று முழு தாக எரிந்து அழிந்துள்ளது. மேலும் இரண்டொரு நாட்களில் இன்னும் ஒரு தொகுதி நெற் பயிர்கள் அழி யும் அபாயத்தில் இருப்பதாக கமக் கார அமைப்பு கவலை தெரிவித் துள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் வழங்கப்படும் நீரின் அளவு குறை வும், காலதாமதமும் இந்த பயிரழி விற்கு காரணமாக இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அதே சமயம் சம்பந்தப்பட்ட நீர் வழங்குனர்களிடம் கமக்கார அமைப் பும், விவசாயிகளும் சென்று முறையிட்டும் இதுவரை எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.


ஆகவே நெற்பயிரழிவை இனியாவது தடுக்கவிரைவான நட வடிக்கையை எடுக்குமாறும் கோரப் பட்டுள்ளது.

# சிறார்களின் திறனாய்வு நிகழ்வு

சில முன்பள்ளிகளில் நடைபெற்ற சிறார்களின் விளையாட்டுப் போட்டிகளின் விபரம் பின்வருமாறு;

புதுக்குடியிருப்பு புனிதவளன் முன்பள்ளியின் விளையாட்டுப்போட்டி கடந்த 21ஆம் திகதி மாலை முன்பள்ளி மைதானத்தில் சிறப்பாக இடம் பெற்றது.

பூநகரி பள்ளிக்குடா தென்னிந்திய திருச்சபையின் முன்பள்ளி விளையாட்டுப்போட்டி கடந்த புதன்கிழமை 2.30 மணிக்கு ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி நகர முன்பள்ளியின் திறனாய்வுப் போட்டி அண்மையில் செஞ்சிலுவை சங்கத்தின் தலைவர் கார்த்திகேசு தலைமையில் நடைபெற்றது. மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட ஒட்டறுத்தகுளம் தென்னிந்திய திருச்சபையின் அன்புபுரம் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களில் விளையாட்டுப்போட்டி கடந்த 21ஆம் திகதி மாலை 2.30 மணிக்கு போதகர் அன்ரனி சுதாகர் தலைமையில் சிறப்புற இடம்பெற்றது. (08,32,15,24)



வவுனியா தெற்கு வலய சிறுவர் அரங்க நிகழ்வில் அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலய மாணவர்களின் சிறுவர் நாடகத்தின் ஒரு காட்சியினைப் படத்தில் காணலாம். படப்பிடிப்பு:- ஆறு சுபாஸ்கரன் (வவுனியா செய்தியாளர்)

## கண்காட்சி

(மன்னார்)

மன்னார் மறை மாவட்டத்தின் மறைக்கல்வி நடுநிலையத்தால் மறைக்கல்விக் கண்காட்சி ஒன்று கடந்த 21ஆம் திகதி, முதல் 24ஆம் திகதி வரை நடைபெற்றது மன்னார் கல்விப்பணிப்பாளர் ஆபீர்லெப்பை இதனை திறந்து வைத்தார். மன் னார் மறைக்கல்வி வளாகத்தில் நடைபெற்ற கண்காட்சியை மாவட் டத்தில் உள்ள பெரும்பாலான பாடசாலைகள் மாணவர்கள் பார் வையிட்டு பயனடைந்தனர். (மி)

## உரிமத்தகடு வழங்கல்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேச பாட சாலைகளில் துவிச்சக்கர வண்டிக் கான உரிமத்தகடுகள் சில வாரங்களாக பிரதேச சபையின ரால் வழங்கப்பட்டு வருகின்றது.

அத்தோடு பாடசாலைகளில் பதிவுகள் செய்யப்படாத துவிச் சக்கரவண்டி உரிமையாளர்கள் உரிமத்தகட்டினை பாடசாலை களில் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் பொதுமக்களின் துவிச்சக் கரவண்டிகளுக்கும் உரிமத் தகடுகள் வழங்கப்பட்டு வருகின்ற தும் குறிப்பிடத்தக்கது.

# நீர்ப்பாசன வாய்க்காலுக்குள் ஹைஏஸ் வாகனம் இறங்கியது

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி 3ஆம் வாய்க்கால் பாலத்திற்கும் கோவிந்தன் கடை சந்திக்கும் இடையேசனிக்கிழமை மாலை ஹைஏஸ் வாகனம் ஒன்று நீர்ப்பாசன வாய்க்காலுக்குள் இறங் கியது.

மாலை மூன்று மணியள வில் வட்டக்கச்சியிலிருந்து கிளி நொச்சி நோக்கி சென்றுகொண் டிருந்த இவ் வாகனம் அருகருகே சென்றுகொண்டிருந்த மூன்று துவிச்சக்கரவண்டிகளுக்கு வழிவிட முயன்றவேளை இவ் விபத்து ஏற்பட்டது.இவ் வாகனத்தை வாய்க் காலிருந்து வெளியே எடுக்க நீண்ட நேரம் முயற்சி எடுக்க வேண்டி ஏற்பட்டது. (12)

# 77 பேருக்கு தாதியர் நியமனம்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தாதியர் பயிற்சி நிலையத்தில் பயிற்சிகளைப் பூர்த்தி செய்த 77 பேருக்கான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் எம்.வேதராஜா தெரிவித்துள்ளார்.இந்த 77 பேரில் 14 பேர் மட் டக்களப்பு வைத்தியசாலைக்கும், 34 பேர் வடகிழக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளுக்கும், 10 பேர் கல்முனை ஆதார வைத்திசாலைக்கும் ஏனையோர் கல்முனை, யாழ்ப்பாணம் கொழும்பு, கருபோவில ஆகிய வைத்தியசாலைகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# கடலுணவுக்கு உரியசந்தைவாய்ப்பு இல்லை யாழ்.குடாநாட்டு மீனவர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடாநாட்டு மீனவர்களால் பிடிக்கப்படும் கடலுணவுகளுக்கு உரியசந்தை வாய்ப்புக்கிடைக்காமை காரணமாக மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கசமாசங்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.**

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்புக்கள் மற்றும் இடப்பெயர்வுகள் என்பனவற்றால் பாரிய பின்னடைவுகளையும், பொருளாதார மற்றும் உடமை இழப்புக்களையும் சந்தித்துள்ள யாழ். குடாநாட்டு மீனவர்கள் கடற்படையினரது பல்வேறு விதமான கெடுபிடிகள் மத்தியில் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.எனினும் இவர்களால் பிடிக்கப்படும் கடலுணவுப் பொருட்களுக்கு உரிய சந்தை வாய்பின்மையால் யாழ். குடாநாட்டு மீனவ சமூகத்தினர் பொருளாதாரப் பின்னடைவுகளை எதிர் நோக்கியுள்ளனர். எனவே இந் நிலைமையைக் கவனத்திற் கொண்டு அரசாங்கம் யாழ். குடாநாட்டு மீனவர்களின் உற்பத்திகளுக்குரிய ஏற்றுமதி, சந்தைப் படுத்தல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என கடற்றொழிலாளர் சம்மேளனத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (33)

## கடனுதவி

யாழ். வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 5 விவசாயிகளுக்கு சமுர்த்தி அதிகார சபையால் தலா 9 ஆயிரம் விகிதம் தொழில் முயற்சிக்கான ஊக்குவிப்புக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.(33)

## யாழ்.கலட்டிச்சந்தி ஆலய பிள்ளையார் சிலை திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கலட்டிச் சந்தியில் உள்ள சிறிய பிள்ளையார் ஆலயத்தில் இருந்த பிள்ளையார் சிலை இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு இத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

கலட்டிச்சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினர் நிலை கொண்டிருந்த காலப்பகுதியில் இக்கோயிலில பூசைகள் நடைபெறாதிருந்தன.

தற்போது இராணுவக் காவலரண்கள் பின் நகர்த்தப்பட்டபின் அப் பகுதி மக்கள் இவ் ஆலயத்தில் கும்பாபிஷேகம் செய்து பூசை, வழிபாடு செய்து வந்தனர்.

இச்சிலை திருட்டுப்போயிருப்பது மக்களை விசனமடைய வைத்துள்ளது. (36)

## யாழ்.குடா நாட்டில் குடிநீர்த்தட்டுப்பாட்டை நீக்க "கார்ப்" அமைப்பு முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் குடிநீர் தட்டுப்பாடு நிலவும் பிரதேசங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய "கார்ப்" அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ். குடாநாட்டில் உள்ள பல கிராமங்களில் சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் பல்வேறு அசௌகரியங்களையும் அனுபவித்து வருவதுடன் குடிநீர்ப் பிரச்சினையால் பல்வேறு நோய்த் தாக்கங்களுக்கும் இலக்காகக் கூடிய அபாயம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதனைக் கவனத்திற் கொண்டே குடிநீர்த் தட்டுப்பாடு நிலவும் பிரதேசங்களுக்கு குடிநீர் வழங்கு வதற்கு "கார்ப்" அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. (33)

## வரும் 5 ஆம் திகதி பிரதேச செயலகம் முன் படையினருக்கெதிராக உசன் மக்கள் மறியல்

(தென்மராட்சி)

தங்கள் வீடுகளையும் காணிகளையும் ஆக்கிரமித்து நிலை கொண்டுள்ள படையினருக்கு எதிராக பெரும் போராட்டங்களை முன்னெடுக்க உசன்பகுதி மக்கள் முடிவுசெய்துள்ளனர்.

அதற்கான ஏற்பாடுகள் துரித கதியில் நடைபெற்றுவருகிறது. கடந்த ஒருவருடத்துக்கு மேலாக இப்பகுதி மக்கள் தங்கள் வீடுகளையும் காணிகளையும் விட்டுப் படையினர் வெளியேறவேண்டும் எனக்கோரிவருகின்றனர். படை அதிகாரிகளையும் நேரடியாகச் சந்தித்தும் இதுவரை எந்த விமோசனமும் இப்பகுதி மக்களுக்குக் கிடைக்காததால் இந்த முடிவை எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

உசன் இராமநாதன் மகாவித்தியாலயப் பகுதியைச் சேர்ந்த மக்களே இம்முடிவை எடுத்து அறிவித்துள்ளார்கள். வருகின்ற ஓகஸ்ட் ஐந்தாம் திகதிக்கு முன்னர் சிறிலங்காப் படையினர் தங்கள் வீடு களை விட்டுவெளியேறவில்லை யென்றால இந்த நிலை ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக சாவகச் சேரிப் பிரதேச செயலகம் முன்னால் தொடர்ந்து மறியலில் ஈடுபடுவ தென முடிவு செய்யப்பட் டுள்ளது இது குறித்து பதினைந் துக்கு மேற்பட்ட பகிரங்கக் கையெழுத்துடன் அடங்கிய மகஜர்களை இப்பகுதி மக்கள் யாழ். படைத்தளபதிக்கும் மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கும் சாவகச்சேரி பிரதேசசெயலகத்துக்கும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழீழ மாணவர் பேரவைக்கும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் கையளித்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (28)

## யாழ்.சிறைச்சாலையில் கைதிகளுக்கு நோய்த் தொற்று

### சுகாதார நிலைமை மோசம்

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு கொப்பளிப்பான் நோய் பரவி வருவதாகத் தெரியவருகிறது.

யாழ். சிறையினுள் உள்ள சுகாதார நிலைமை உரியமுறையில் பேணப் படாததினாலும் இடநெருக்கடியினாலும் இந்நோய் வேகமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.எனினும் சிறைச்சாலையினுள் இந்நோய்த் தடுப்பிற்கான உடனடி நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது. (33)

## முகமாலை சோதனைச் சாவடியில் புலனாய்வாளர்களால் மக்களுக்கு அச்சுறுத்தல்

முகமாலை சோதனைச் சாவடி மூலமாகப் பயணிக்கும் பொது மக்களை குறிவைத்து சிறிலங்கா புலனாய்வுத்துறை விசாரணை என்ற பெயரில் நீண்ட நேரம் மக்களைத் தடுத்து வைப்பதாகத் தெரிய வருகிறது.

இதனால் அலுவலகங்கள் மற்றும் குறித்த இடங்களுக்கு போக வேண்டிய பொது மக்களில் பலர் சிறிலங்காப் புலனாய்வுத் துறையினரால் அலைக்கழிக்கப்படுவதாகத் தெரியவருகிறது. நீண்ட நேரம் விசாரணைகள் என்ற போர்வையில் பொது மக்கள் பலர் அச்சுறுத்தப்படுவதாகத் தெரிகிறது. கடந்த வியாழக்கிழமை இப்பாதையூடாக பயணித்த ஈழநாதம் தென்மராட்சி செய்தியாளரை அரை மணி நேரத்திற்கு மேல் தடுத்து வைத்து விசாரணை என்ற போர்வையில் அடையாள அட்டையையும் கொண்டு வந்த புத்தகத்தையும் தரமறுத்து சிறிலங்காப் புலனாய்வுதுறையினர் அட்டகாசம் புரிந்துள்ளனர். கடும்வார்த்தை பிரயோகத்திலேயே, தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டார். இது ஒப்பந்த நடைமுறைகளையும் சமாதான உடன்பாட்டையும் படையினர் மதிக்காது மீறி நடந்து வருகின்றனர் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. கடந்த சில நாட்களாகப் படையினரின் சோதனைச் சாவடி மூலமாக பயணம் மேற்கொள்ளும் பொதுமக்களைக் குறி வைத்து சிறிலங்காப் புலனாய்வுத்துறை தொல்லை கொடுத்து வருவதாகத் தெரியவருகிறது.

## வலி.வடக்கு நலன்புரி நிலையத்திற்கு மின் விநியோகம் செய்யக்கோரிக்கை

வலிகாமம் வடக்கு பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் குடியமர்த்தப்பட்டிருக்கும் நலன்புரி நிலையங்களிற்கு மின்சார விநியோகம் செய்யப்பட வேண்டுமென கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரண்டு வருடங்களைக் கடந்து விட்டபோதிலும் உயர்பாதுகாப்பு வலயத்தினைக் காரணம் காட்டி இவ்வாறான நலன்புரி நிலையங்களில் வசித்துவரும் குடும்பங்களுக்கு மீளக்குடியேற அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றது.இந்நிலையில் நலன்புரி நிலையங்களில் வசித்து வரும் இவ் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு மின் விநியோத்தினை வழங்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அண்மையில் தெல்லிப்பளைப் பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற விவசாயக்குழுக் கூட்டத்திலே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் முழுமையான மின் சுற்றுக்கள் குடியிருப்புகளில் அமைக்கப்படாதவிடத்து அவ்வாறு மின்சார விநியோகம் மேற்கொள்ள முடியாதென இலங்கை மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (27)

## யாழ். குடாநாட்டில் கரையோரப் பிரதேச மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த 'போரூட்' நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ள கரையோரப் பிரதேச வாழ். மக்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை "போரூட்" நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

கடந்த கால் யுத்த அனர்த்தங்கள் மற்றும் இடப்பெயர்வுகள் என்பவற்றால் பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதாரப் பின்னடைவுகளையும் அதனால் அவர்கள் படும் துன்பங்களையும் கவனத்திற் கொண்டே "போரூட்" நிறுவனம் இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஓர் அங்கமாக கரையோரப் பிரதேச இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் விதத்தில் கடலுணவைப் பதனிடுதல் சம்பந்தமான தொழிற்பயிற்சிகளை வழங்கி வருகிறது. (33)

---

## கொழும்பின் பாதுகாப்புக்குறித்து ஜே. வி. பி. அச்சம் தெரிவிப்பு

கொட்டாவவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவம் பாரிய போர் நிறுத்த மீறல் என ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியதோடு இதுதொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. ஜே.வி.பி., இச்சம்பவதுடன் தமிழீழ விடுதலைப் புலிகளே தொடர்புபட்டிருப்தாகவும் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கொழும்பின் பாதுகாப்புக்கு மட்டுமன்றி தேசிய பாதுகாப்புக்கே பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் தனது அறிக்கையில் ஜே.வி.பி. அச்சம் வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இத்தாக்குதல் சம்பவம் விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளை எவ்விதத்திலும் பாதிக்காதென சிறிலங்காவின் சட்ட மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் திலக் ரணவிராஜ தெரிவித்துள்ளார். இத்தாக்குதல் தொடர்பாக 'Tamil Net' எனப்படும் இணையத்தளமே முதன் முதலில் தகவல் வெளியிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள திலக் ரணவிராஜ, குறிப்பிட்ட சம்பவம் தொடர்பான தகவல் அந்த இணையத்தளத்துக்கு சென்றடைந்தமை தொடர்பாக விசாரணைகள் இடம்பெறவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, இச்சம்பவத்தில் பலியான எட்டுப் பேரினது சடலங்களும் பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், பிரேத பரிசோதனை முடிவுகள் வெளியான பின்னரே இச்சம்பவம் தொடர்பான விபரங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் விசாரணைகளை மேற்கொண்டு வரும் சிறிலங்காப் பொலிசார் தெரிவித்தனர்.

## புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர் கொல்லப்படவில்லையென தே.பா.சபை மறுப்பு


கொழும்பில் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞர்களுள் சிறிலங்கா புலனாய்வுத் துறையைச் சேர்ந்த ஒருவரும் உள்ளடங்குவதாக வெளியான செய்திகளை சிறிலங்காவின் தேசியப் பாதுகாப்புச் சபை மறுத்துள்ளது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களுக்கும், சிறிலங்காப் புலனாய்வுத் துறையினருக்கும் இடையில் எதுவிதத் தொடர்புகளும் இல்லை எனவும் தேசிய பாதுகாப்புச்சபை தெரிவித் துள்ளது இதேவேளை, இக்கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணை களைத் தாம் ஆரம்பித்துள்ளதாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் குரல்தரவல்ல அதிகாரி டிஸா பின்போகா தெரிவித்துள்ளார். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் இச்சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று தகவல்களை சேகாித்து வருவதாகவும் இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் யார் என்பதைத் தம் மால் கூறமுடியாதுள்ளதாகவும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

## கூட்டமைப்பு பா.உறுப்பினர்களை சனாதிபதி விரைவில் சந்திப்பு

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விரைவில் சந்திக்கவுள்ளதாக சனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நாட்டின் தற்போதைய அரசியல் மற்றும் விடுதலைப் புலிகளுடன் சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது பற்றிய விடயங்கள் குறித்து தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சனாதிபதி விரிவாக கலந்துரையாடவுள்ளார். அத்துடன் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப் பணிகள் குறித்தும் சனாதிபதி அவர்களுடன் கலந்துரையாடவிருக்கின்றார். அடுத்த மாதம் முதல் வாரம் இச்சந்திப்பு இடம் பெறவிருக்கின்றது என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

# தமிழரசுக் கட்சிப் பா.உ.கள் பேசுவது எல்லாம் இனவாதக் கட்சிகளுக்குப் பிடிக்காததாகவே இருக்கும்



கடந்த 20 ஆம்திகதி பாராளுமன்றத்தில் தமிழரசுக்கட்சிப் பா.உ.கஜேந்திரன் ஆற்றிய உரை தொடர்பாக அவர் விளக்குகிறார்.

நேர்காணல் சசிக்குமார்

கடந்த 20 ஆம் திகதி பாராளுமன்றத் தொடரில் தமிழினத்திற்கு சிங்கள பேரின வாதிகளால் இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பாகக் குரலெழுப்பிய தமிழரசுக்கட்சியின் யாழ்.மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் அவர்களுக்கு எதிராக சிங்கள பேரினவாத கட்சிகள் செயற்பட்டன. செயற்பட்டும் வருகின்றன. இவ்விடயம் தொடர்பாக கஜேந்திரன் அவர்கள் பாராளுமன்றில் முன்வைத்த கருத்துக்கள் தொடர்பாகவும் அதற்கு பேரினவாதிகளின் எதிர்ப்பு குரல்கள் தொடர்பாகவும் கேட்டோம்.

* நீங்கள் பாராளுமன்ற கூட்டத்தில் எவ்வாறான கருத்துக்களை முன்வைத்தீர்கள் குறிப்பாக உங்களது எந்த கருத்தை சிங்கள அரசியல்வாதிகள் எதிர்த்து கூச்சலிட்டனர்?

கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தொடர் தொடங்கிய பொழுது அன்றைய தினம் ஊடகங்களின் `சுதந்திர மானதும் நடுநிலையானதும் தொடர்பான ஒரு விவாதம் நடைபெற்றது. அதில் ஆளும் கட்சிஎதிர்க்கட்சிகள் கலந்து கொண்டிருந்தன. அங்கு உரையாற்றிய பெரும்பான்மையின ஆளும்கட்சி எதிர்க்கட்சிகளின்பாராளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரை ஒவ்வொருவரும் தங்களுக்கு மற்றைய கட்சிகளினால் எவ்வாறு ஊடகங்களினூடாக அநீதி இழைக்கப்படுகின்றது என்பது தொடர்பாகவே விவாதித்துக் கொண்டிருந் தார்கள். ஐக்கியதேசியக்கட்சியினர் உரையாற்றும்போது ஆளும் கட்சியினர் ஊடகங்களை தமக்கு எதிராகப்பயன்படுத்துகிறார்கள் என்பதையும் ஆளும்கட்சியினர் ஐக்கிய தேசியக்கட்சியினரின் ஆட்சிக்காலத்தில் தமக்கு எவ்வாறு ஊடகங்களினூடாக அநீதி இழைக்கப்பட்டதென்றும் உரையாற்றிக் கொண்டிருந்தார்கள். அந்த இடத்தில் ஒன்றை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. என்னவென்றால் ஊடகங்களானது எந்த அரசு ஆட்சிக்குவருகிறதோ அந்த அரசின் ஊதுகுழல்களாகவேசெயற்பட்டு வந்திருக்கின்றதென்பதை தெளிவாக உணர முடிந்தது.

இவர்கள் உரையாற்றுகின்றபோது யாருமே வடக்கு கிழக்கு தமிழ்மக்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகள் அந்த விடயத்தில் ஊடகங்கள் பக்கச்சார்பாக நடந்து கொண்ட தன்மைகள் என்பனபற்றியோ இந்த இனப்பிரச்சினைக்கு ஊடகங்களே முக்கியமான காரணிகளாக இருந்தன என்பது பற்றியோயாருமே சுட்டிக்காட்டவில்லை.

இந்த விடயம் தொடர்பாக எனக்கு உரையாற்றும் சந்தர்ப்பம் கிடைத்த போது குறிப்பிட்டதென்னவென்றால் மாறிமாறி அரசாங்கங்கள் ஆட்சிக்குவரும்போது அவற்றின் ஊதுகுழல்களாகவே ஊடகங்கள் செயற்ப்பட்டு வருகின்றன. இந்த ஊடகங்களின் பக்கச்சார்பான தன்மையாலும் அரசாங்கம் நியாயப்படுத்திவந்ததாலுமே இன்று இனப்பிரச்சினை பூதாகரமெடுத்து இவ்வளவுமோசமான நிலைக்கு வந்திருக்கின்றது. அதேவேளை வடக்குகிழக்கில் தமிழ்பத்திரிகையாளர்கள் ஊடகவியலாளர்கள் தமிழினத்திற்கிழைக்கப்படும் அநீதிகளை வெளியிட்டு வருவதனால் இவர்கள் காலம்காலமாக அச்சுறுத்தப்பட்டு வந்ததோடு கொலைசெய்யப்பட்டும் வந்திருக்கிறார்கள் என்பதை சுட்டிக் காட்டியிருந்தேன். அதேவேளை வடக்குப் பகுதியில் நிமலராஜன் கொல்லப்பட்டதையும் சுட்டிக்காட்டி இராணுவம்யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்ததன் பின்னர் இராணுவமும் ஈ.பி.டி.பி.யினரும் தமிழ்மக்களுக்கு இழைத்த அநீதிகளை உலகிற்கு எடுத்துக்காட்டியதால் அவர் கொலைசெய்யப்பட்டார் என்பதையும் அந்தக் கொலைசம்பந்தமாக இராணுவத்தினருக்கும் ஈ.பி.டி.பியினருக்கும் சம்பந்தமிருப்பதாக தமிழ்மக்கள் சந்தேகப்படுவதோடு இது தொடர்பாக வழக்கு நடப்பதையும் சுட்டிக்காட்டியிருந்தேன். இந்த வேளை ஈ.பி.டி. பி.யினர் தமிழருக்கு குரல் கொடுத்த ஊடகவியலாளர்களைக் கொலை செய்வதனூடாக தமிழினத்தை அழிக்க முயலும் சக்திகளுக்குதுணை நின்றதையும் சுட்டிக்காட்டியதோடு கிழக்கு மாகாணத்தில் இருந்த தேசத்துரோகி கருணாவுடனும் டக்ளஸ் தேவானந்தாவுக்குத் தொடர்பிருக்கிறது. அதனை அவர் வெளிப்படையாக ஒப்புக் கொண்டிருக்கின்றார் இதேவேளை கருணாவின் போசகராகவும் டக்ளஸ் தேவானந்தா செயற்பட்டு வருகின்றார். அத்தோடு கிழக்கில் கொலை செய்யப்பட்ட மூத்த பத்திரிகையாளர் நடேசனது கொலைக்கும் கருணாவுக்கும் தொடர்பிருப்பதாக பேசப்படுகிறது. வடக்கில் நிமலராஜனின் கொலைக்கு காரணமான ஈ.பி.டி.பியினரின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவே கிழக்கில் நடேசனின் கொலைக்கும் காரணமாக இருப்பதோடு இன்று அவர் ஒரு அமைச்சராக இருக்கின்ற போது அக் கொலைகளினது முழுப்பொறுப்பையும் அரசாங்கமே ஏற்க வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தேன்.

அதேவேளை வடக்கு கிழக்கில் தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்ந்து கொலை செய்யப்படுவார்களாகவிருந்தால் இது மீண்டும் ஒரு யுத்தத்தையே உருவாக்கும் இவ்வாறு மீண்டும் யுத்தம் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படுமானால் யாழ்ப்பாண குடாநாட்டில் உள்ள நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினரை தென்பகுதிமக்கள் பெட்டிகளிலே தான் பார்க்க வேண்டி வரும் என்பதனை சுட்டிக் காட்டினேன்.

இதேவேளை ஊடகவியலாளர்களின் படுகொலைகளின் தொடர்பில் ஈ.பி.டி.பி.யினருக்கும் தொடர்பு உண்டென தமிழ் மக்கள் சந்தேகப்படுகின்றனரென நான் உரையாற்றிக் கொண்டிருக்கின்ற வேளை ஆளும்கட்சியினர் கூச்சலிடத் தொடங்கி விட்டார்கள். அவர்களுடைய கூச்சல் அதிகமாக இருந்த காரணத்தினால் நான் வேகமாக உரையாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் எனது உரை சரியான முறையில் மொழி பெயர்ப்புச் செய்யப்படவில்லை. இதில் ஒரு சில சொற்கள் மொழி பெயர்ப்புச் செய்யப்படாமல் போனது. ஆளும் கட்சியினர் எனது உரையை குழப்ப முயன்றுகொண்டிருந்ததனால் நான் என்ன கருத்தை கூறினேன் என்பதை சரியான முறையில் அவர்கள் உள்வாங்கவில்லை. மொழிபெயர்ப்பு சரியாக விளங்காததனால் வெறுமனே யாழ்ப்பாணத்திலுள்ள படையினரைப் பெட்டிகளில் பார்க்க வேண்டிவரும் என்ற வசனம் மட்டும் அவர்களுக்குக் கேட்டுள்ளது. அவர்கள் அதை மட்டும் வைத்துக்கொண்டு கூச்சல் குழப்பமிட்டு அந்த நிலைமைகளை திரிபுபடுத்தி நாங்கள் ஏதோ யுத்தப்பிரியர்கள் என்றோ சமாதானத்திற்கு எதிரானவர்கள் என்றோ காட்ட முற்படுகிறார்கள். நான் பின்னர் அதை விளக்கியிருந்தேன். அதாவது மீண்டும் ஒரு யுத்தம் வருமாக இருந்தால் கடந்த காலத்தில் இராணுவத்தினர் உயிரிழப்பை சந்தித்தது போன்ற ஒரு நிலைதோன்ற வாய்ப்புள்ளது என்பதனையே சுட்டிக்காட்டினேன் என்பதை மிகவும் தெளிவாக கூறியிருந்தேன். இருப்பினும் ஆளும்கட்சியினரைப் பொறுத்த வரையில் அவர்கள் மாகாண சபைத்தேர்தல் காலப்பகுதியிலும் கூறியிருந்தார்கள் 20ஆம் திகதி தமது பெரும்பான்மையை நிரூபிப்பதென ஆனால் அவர்கள் நிரூபிக்க முடியவில்லை. இந்த சந்தர்ப்பத்திலே நான் கூறிய கருத்துக்களை திரிபுபடுத்தி தென்பகுதி மக்களிடையே ஒரு குழப்பத்தை ஏற்படுத்துவதோடு ஹெல உறுமயவின் ஆதரவைத்தாம் பெற்று இக் கூற்று சிங்கள மக்களுக்கு எதிராகக் கூறப்பட்ட கூற்றுப் போல ஒரு தோற்றப்பாட்டை உருவாக்கி நூற்றிப்பதின்நான்கு பேரின் கையொப்பங்களை வாங்கி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்ற நிலையே அவர்களிடம் இப்போது இருந்து வருகிறது.இது தொடர்பாக விவாதமொன்றுக்கும் அவர்கள் கேட்டிருப்பதாக அறிய முடிகின்றது. தமிழரசுக்கட்சியை பொறுத்தவரை அவர்கள் விவாதத்திற்கு வந்தால் நாமும் விவாதம் செய்யத் தயாராகவே இருக்கின்றோம். கடந்த காலங்களில் பாராளுமன்றத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் மனங்களைப் புண்படுத்தும் கருத்துக்களை காலம் காலமாக அவர்கள் வெளியிட்டு வந்திருக்கின்றார்கள். அந்த வேளைகளில் அதற்கு சபாநாயகர்கள் எந்த வித கட்டுப்பாடுகளையும் விதிக்கவில்லை.

அப்படியான உரைகளை நிறுத்துமாறு தடை விதித்ததும் கிடையாது. இப்போது எனது கருத்தை சபாநாயகர் எதிர்ப்பது எந்த விடயத்தினடிப்படையில் தடைவிதித்தார். என்பது தெளிவுபடுத்த வேண்டிய கடப்பாடுடையவர்களாக உள்ளார்கள், சபாநாயகர்தனக்கு பிடித்த பிடிக்காத விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படியானால் அது சகலபாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இது ஒரு விதியாக இருக்க வேண்டும். ஆனால் இங்குநிலைமை அவ்வாறு இல்லை பெரும்பான்மையினரின் பாராளுமன்ற் உறுப்பினர்களை திருப்திப் படுத்துவதாகவே நாம் உரையாற்ற வேண்டும் என்பதே விதியாக இருக்கின்றது. இங்கு தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் அனைவருமே உரையாற்றும் போது பெரும்பான்மைக் கட்சியினருக்கு பிடிக்காத தொன்றாகவே அது இருக்கும் அவ்வாறு செய்வதற் காக மக்கள் எங்களை இங்கு அனுப்பவில்லை. எனவே இந்த நிலை தொடருமானால் பாராளுமன்றத்தில் காலத்தை கடத்துவது கடினமான தொன்றாகவே இருக்கும்.

* உங்களது இந்தக் கருத்துத் தொடர்பாக எதிக்கட்சியினர் எவ்வாறான கருத்துக் களை வெளியிட்டு வருகிறார்கள்?

அவர்களை பொறுத்தவரை இந்தக் கருத்தைப் பயன்படுத்தி ஆளும்கட்சி தம்மை பலப்படுத்தி எதிர்க்கட்சியினருக்கு எதிராக பிரச்சாரம் செய்வார்கள் என்பதனால் இக் கருத்தை நீக்கம் செய்யுமாறே கூறிவருகிறார்கள். ஆளும் கட்சியினரோ இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஹெல உறுமயவின் ஆதர வைப்பெற்று அவர்களின் கையெழுத்தைப் பெறுவதன் மூலம் தமது பெரும் பான்மையை நிரூபிக்கவே முற்படுகிறார்கள்.

## புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் பிரதான வீதி போக்குவரத்தின் அவலத்தைப் போக்குக!

புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் பிரதான வீதி சீரின்மையால் இவ் வீதியைப் பயன்படுத்தும் பொது மக்கள் மிகுந்த சிரமத்தை எதிர் கொண்டு வருகின்றனர்.

கிரவல் இடப்பட்டுத்தார் ஊற்றப்படாமல் உள்ள இவ்வீதி தற்போது குன்றும் குழியுமாக காணப்படுகிறது.இவ்வீதியால் செல்கின்ற பெரியரக வாகனங்களினால் மேலெழும் புழுதிகளால் இவ் வீதியால் செல்லும் மோட்டார் சைக்கிள் பயணிகளும் துவிச்சக்கர வண்டிப் பயணிகளும் மிகுந்த சிரமங்களை எதிர் கொண்டுவருகின்றனர். புளியங் குளத்திலிருந்து புதுக்குடியிருப்புப் பகுதிக்குச் செல்லும் பிரதான வீதியின் ஒரு பகுதியாக இருக்கும் இவ்வீதிவாகனப்பாவனைகள் நிறைந்த வீதி என்பது குறிப்பிடத்தக்கது. (து)

## மல்லாவி நகரின் குடிநீர் தேவையைப் போக்க நீர்ப் உதவி

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச மல்லாவி நகரில் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய நீர்ப்நிறுவனம் முன் வந்துள்ளது. இதற்கு அமைவாக துணுக்காய் பிரதேச சபையுடன் இணைந்து ஆரம்பவேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி திட்டத்தின் கீழ் மல்லாவி நகரின் குடிநீர் தேவையுள்ள பகுதிகள் இனங்காணப் பட்டு அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. சந்தைப்பகுதிகள் மருத்துவமனை, கடைத்தொகுதிகள் என குடிநீர்குழாய்கள் இணைப்பு கொடுக்கப்படவுள்ள இத்திட்டத்திற்கு நீர்ப் நிறுவனம் ரூபா 90 லட்சம் ஒதுக்கியுள்ளது. அத்துடன் புதிய கிணறுகள் அமைத்தல் மேல்நிலை நீர் தொட்டிகள் அமை த்தல் போன்றவை நடைபெறவுள்ளதாக பிரதேசசபைத் தொழில்நுட்பஅதிகாரி ச.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார். (24)

## கெயார் உதவித் திட்டத்தில் பயனாளிகள் இனங்காணல்

(முல்லை)

முள்ளியவளைப் பிரதேசத்தின் முறிப்புக் கிராமத்தில் கெயார் நிதி உதவியுடன் முல்லை பொ.அ நிறுவனத்தினால் நடைமுறைப் படுத்தப்படும் 2004 ஆம் ஆண்டிற் கான புதிய திட்டமிடற் கூட்டமும் பயனாளிகள் தெரிவும் கடந்த 15ஆம்திகதி முறிப்பு பொது நோக்கு மண்டபத்தில் கிராம அலுவலர் தலைமையில் இடம் பெற்றது.

இதில் கெயார் பிரதிநிதி கணேசலிங்கம், திட்ட மேற்பார்வையாளர் மற்றும் மு.பொ.அ நிறுவன நிர்வாக உத்தியோகத்தர்கள், திட்டமேற்பார்வையாளர், வலயப் பொறுப்பாளர் செந்தூரன், மாவீரர் பணிமனை பொறுப்பாளர் சசி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் கெயார்பிரதிநிதிகளின் கருத்துரைகளும் இடம் பெற்றன. இதேவேளை பயனாளிகளின் தெரிவின்போது மலசல கூடம் கட்ட 35 பேரும், நெற் செய்கையில் 38 பேரும், சிறு தானியம் 31 பேரும், மீன்பிடியாளர்கள் 05 பேரும், வீட்டுத்தோட்டம் 08 பேரும், ஆடு வளர்ப்பிற்கு 15 பேரும்,பொதுக் கிணறு 02 பேரும் மொத்தம் 132 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர். (20)

## காட்டு யானைகள் கைவரிசை தென்னைகள் பலவும் அழிப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் காட்டுயானைகளினால் பல தென்னைமரங்கள் நாசம் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி சம்பவமானது கடந்த சனிக்கிழமை இரவு 10.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. திடீரென் புளுதியாற்றுக்கு கீழ்க் கரையில் உள்ள கரைச்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் சொந்தக் காணியிலேயே 10இற்கு மேற்பட்ட காய்க்கும், காய்க்கும் நிலையில் உள்ள தென்னை மரங்களையும் ஏனைய மரங்களையும் யானைகள் முறித்து துவம்சம் செய்துள்ளன.

இச் சம்பவத்தை அடுத்து, மாயவனூர் புளுதியாற்றுக்கு அண்மையாக உள்ள குடிமனைகளில் உள்ள பயனுள்ள மரங்களையும் குடிசைகளையும் நாசம் செய்யலாம் என அப்பகுதி மக்கள்அச்சம் வெளியிட்டுள்ளார்கள். (12)




# கணக்குத் தீர்ந்ததா...

பாகிஸ்தான் ரசிகர்களுக்கோ கொண்டாட்டம்- இந்திய ரசிகர்களுக்கோ ஏமாற்றம்

உலக கிரிக்கெட் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஆசியக் கோப்பைக்கான முக்கியமான சுப்பர் லீக் போட்டி ஒன்றில் இந்திய அணியை வீழ்த்தி விட்டது பாகிஸ்தான்.



இவ் வெற்றி இத் தொடரில் முக்கியமாக அமைந்தது. அதேவேளை பாகிஸ்தானுக்கு வரலாற்று வெற்றியாகவும் அமைந்து விட்டது.

நீண்ட நாட்களாக எதிர் பார்த்திருந்த இரு அணிகளுக்கும் இடையிலான மோதல் எப்போது நிகழும் யார் அதில் வெல்லப்போகிறார்கள் என்பது நாளுக்கு நாள் பத்திரிகைகளின் பக்கங்களை நிரப்ப இதனிடையே இந்தியாவை பழி தீர்க்குமா பாகிஸ்தான் என்ற கருத்து வலுப்பெற்றிருந்தது.

அதாவது சொந்த மண்ணில் வைத்து பாகிஸ்தானை படு தோல்வி அடையச் செய்த இந்தியாவை வெற்றி கொள்ள வேண்டும் என்ற துடிப்பு பாகிஸ்தானை ஆசியக் கோப்பை கிரிக்கெட் ஆரம்பித்தது முதல் வலுவாக்கியிருந்தது.

இதனிடையே இந்த வாய்ப்பை பாகிஸ்தானிற்கு வழங்கிவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்த இந்தியாவுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்தது. அதற்கு முதலாவது ஓவரே அதிர்ச்சியாக அமைந்தது.

இரண்டு ஓட்டங்களை மாத்திரம் பெற்று ஹமீட்டை இழந்தது. இது ஆரம்பத்திலேயே உற்சாகம், பரபரப்பு, பாகிஸ்தான் ரசிகர்களுக்கோ ஏக்கம் காப்பாற்றுவது யார்? அடுத்து களமிறங்குகின்றார் சொஹைப் மலிக். சிறப்பான ஆட்டம். கடவுள் தான் களமிறங்கியுள்ளார். என்ற பிரமிப்பு பாகிஸ்தான் ரசிகர்களிடையே. அற்புதமான ஆட்டம் பாகிஸ்தானின் 300 என்ற பிரமாண்டமான ஓட்ட எண்ணிக்கைக்கு வலுச்சேர்த்தது.


மலிக் ஒரு நாள் போட்டியில் 143 ஓட்டங்களைப் பெற்றார். அதுவே ஒரு நாள் போட்டியில் அவரது சிறப்பு ஓட்டமாகவும் அமைந்த போதும் இரண்டாவது ஓவர் அதிர்ச்சியாக அமைந்தது இதற்கும் மேலாக இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்.

இது இவ்வாறிருக்க வெற்றிக்காக களமிறங்கிய இந்திய அணிக்கும் ஆரம்பம் பிரகாசமாக அமைந்தபோதும் இரண்டாவது ஓவர் அதிர்ச்சியாக அமைந்தது.. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சேவாக்கை இழந் தது.

ஆனாலும் வெற்றி பெற வேண்டும் அதற்காகவே போராடினார்கள். முடியவில்லை நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 8 விக்கெட்டுக்களை இழந்து 241 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

இது ஒரு வகையில் இந்திய அணிக்கு தென்பாக அமைந்துள்ளது. அதாவது சிறிலங்கா அணியுடனான இன்றைய போட்டியை வெற்றிகொள்ளும் பட்சத்தில் இறுதிப் போட்டிக்கான தகுதியை இந்திய அணி பெற்று விடும்.

இதற்காகவே பாகிஸ்தானுடனான போட்டியில் இந்தியா ஓர் போராட்டமே நடத்தியது அதாவது போனஸ் புள்ளி பெறுவதற்கு 240 ஓட்டங்கள் பெற வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இவ் ஓட்டத்தை பெறுவதற்கு இந்திய அணி போராடியதே போட்டியில் சுவாரசியமாக அமைந்தது. இது இந்திய அணிக்கு தோல்வியை



விட மேலானதாக அமைந்திருந்தது. மொத்தத்தில் இந்திய அணிக்கு எதிரான வெற்றி பாகிஸ்தானின் கணக்கு தீர்ந்ததென்று கூறுவதில் தவறில்லை.

# சிக்கித் தவிக்கும் ஜோன்ஸ்

எதென்ஸ் ஒலிம்பிக்கிற்கான தகுதிச் சுற்றுப் போட்டிகளில் கலந்து கொண்ட தடகள வீரர்கள் பலர் தமது தகுதியையிழந்த செய்திகள் கடந்த வாரங்களில் பலரை சோகத்தில் ஆழ்த்தியிருந்தது.

இதில் அமெரிக்காவின் தங்க மங்கை என வர்ணிக்கப்படும்



மரியன் ஜோன்ஸ்சுக்கு 100,200 மீற்றர் போட்டிக்கான தகுதிச்சுற்றுப் போட்டிகளில் அதிஷ்டமாக அமையாது போனமை முக்கியமானது.

இந்நிலையில் அவர் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்வதற்கு நீளம் தாண்டுதல் போட்டி வாய்ப்பளித்திருந்தது.

தற்போது அவர் எதென்ஸ் செல்வதே கேள்விக்குள்ளாகியுள்ளது.

அவரது முன்னாள் கணவரின் திடுக்கிடும் தகவல் இத் தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜோன்ஸ்க்கு தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தை ஊசி மூலம் தானே செலுத்தி இருப்பதாக கூறும் ஹன்டர் சிட்னி ஒலிம்பிக்கின் போது போதை மருந்து பயன்படுத்தினார் என்றும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் "பால்கோ்" ஊக்க மருந்து ஊழல் விவகாரத்தில் மரியன் ஜோன்ஸ் பெயரும் சிக்கி விசாரணை நடைபெற்றுவரும் நிலையில் முன்னாள் கணவரின் தகவல் அவரை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளதுடன் ஒலிம்பிக் வாய்ப்பே நிராசையாகும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

ஜோன் ஹன்டரை 2002 ஆம் ஆண்டில் விவாகரத்துச் செய்தார். பின்னர் பிரபல ஓட்ட பந்தய வீரர் டிம்பொன்ட் கொமரியை மணந்து ஒரு ஆண் குழந்தையைபெற்றுள்ளார்.

பரபரப்பான ஹன்டரின் குற்றச்சாட்டை ஜோன்ஸ்சின் வக்கீல் மறுத்துள்ள நிலையில் மரியன் ஜோன்ஸ் எதன்ஸ் ஒலிம்பிக்கில் கலந்து கொள்வாரா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# முதலிடத்திற்கான போராட்டமா?

கொழும்பில் நடைபெற்று வரும் ஆசிய கிண்ணத்துக்கான கிரிக்கெட்போட்டிகள் உச்ச நிலைக்கு



வந்துள்ளன. நேற்று முன்தினம் பாகிஸ்தானிடம் பரிதாபமாகத் தோற்ற இந்திய அணி இன்று நடைபெறும் சிறிலங்காவுடனான போட்டியில் வாழ்வா சாவா என்று போராட வேண்டியிருக்கும். காரணம் இந்திய- பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் இறுதிப் போட்டிக்கான முடிவைக்காணும் போட்டி இதுவாகும்.

இது இவ்வாறிருக்க கடந்த 1988 ஆம்ஆண்டு பங்களாதேஷில் நடைபெற்ற ஆசியக்கிண்ண இறுதிப் போட்டியில் சில மறக்க முடியாத நிகழ்வுகளை நாம் மீட்டுப்பார்ப்பது பொருத்தமானதாகவிருக்கும்.

இந்திய பாகிஸ்தான், சிறிலங்கா, பங்களாதேஷ் ஆகிய நான்கு அணிகள் மோதிய இப் போட்டியில் சிறிலங்கா, இந்திய அணிகள் இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றிருந்தன.

எனினும் பாகிஸ்தான் அணியையும் பங்களாதேஷ் அணியையும் வென்று இந்திய அணி இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றது குறிப்பிடத்தக்கது.


1988 நவம்பர் 2 ஆம் திகதி நடைபெற்ற இறுதிப்போட்டியில் முதன்முதலாக வெளிநாட்டு அணிகளை வெற்றிகண்டு இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்ற சிறிலங்காவை இந்திய அணி சந்தித்தது.

அன்று விசேட விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டது. சிறிலங்கா பங்கேற்ற ஏனைய

அன்றைய லீக் போட்டியொன்றிலும் சிறிலங்கா அணி இந்திய அணியை 17 ஓட்டங்களால் வென்றது. அன்றைய பந்து வீச்சாளரான கபில்விஜய குணவர்தன 49 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

திலிப் வெங்சாகரின் தலைமையிலான இந்திய அணிக்கெதிரான இப் போட்டியில் சிறிலங்கா 271 ஓட்டங்களைப்பெற்றது. அரவிந்த டி சில்வா-69, அர்ஜுன( உப தலைவர்) 49 ஓட்டங்களையும் அதுல சமரசேகர 66 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்கு ஆடிய இந்திய அணி 44 ஓவரில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 254 ஓட்டங்களை மட்டும் பெற்றது.





இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடுமாறு சிறிலங்காவைக் கேட்டுக்கொண்டது எனினும் முன்னைய போட்டிகளில் துடுப்பாட்ட வீரர்கள் காட்டிய திறமையை இப்போட்டியில் வெளிப்படுத்த சிறிலங்கா அணிக்கு முடியாமல் போய்விட்டது. முதலாவது இணை 53 ஓட்டங்களைப் பெற்றது. அதில் பிரண்டன் குறுப்பு 21 ஓட்டத்துடனும் மகாநாம 23 ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். அத்துடன் துடுப்பாட்டத்தில் ஏனைய வீரர்களும் பிரகாசிக்கத் தவறி விட்டனர்.

அரவிந்த, அதுல ஆகியோர் முறையே 18,26என்ற

அடிப்படையில் ஓட்டங்களைப் பெற்று ரன்அவுட் ஆகினர். எனினும் துலிப் மெண் டிஸ் 36 ஓட்டங்களைப் பெற்றார். அந்த வகையில் 43.2 ஓவரில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து சிறிலங்கா 176 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பதிலுக்கு 177 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி ஆடிய இந்திய அணி 37.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 180 ஓட்டங்களைப் பெற்று 1988 ஆம் ஆண்டு கிண்ணத்தைக் கைப்பற்றியது. இப்போட்டியில் அன்றைய வீரர் நவ்ஜோத்சிங் சித்து 76 ஓட்டங்களைப் பெற்று ஆட்டநாயகனானதுடன் கவாஸ்கர் 50 ஓட்டங்களைப் பெற்றார்.

இப்போட்டித் தொடரிலும் தொடர் வெற்றிகளைப் பெற்ற (அதாவது தோல்வியடையாமல்) சிறிலங்கா அணி இறுதிப்போட்டியில் கிண்ணத்தைப் பறிகொடுத்தது போன்று வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி நடைபெறும் இறுதிப் போட்டியையும் கோட்டை விட்டு விடுமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

போட்டிகளை மின் ஊடகங்கள் ஒளி, ஒலி பரப்பு செய்யாமல் விட்டு இறுதிப் போட்டியை ஒளி, ஒலி ஒளிபரப்புச் செய்தன. ரசிகர்கள் வீடுகளில் தொலைக்காட்சி முன் திரண்டு காணப்பட்டனர்.

இவ் விறுதிப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற

வடிவேல்

# முந்நூறு இளைஞர்களுக்கு ஹெலஉறுமய வேலைவாய்ப்பு

ஜாதிக ஹெல உறுமயவின் தொழில்வங்கியினால் முந்நூறு இளைஞாகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் உடுவே தம்மாலோக தேரரினால் ஆரம்பிக்கப்பட்ட இத் தொழில் வங்கியில் தம்மைப் பதிவுசெய்துள்ளோரில் நூறு இளைஞர்களுக்கு அடுத்த மாதம் முதல் இரண்டு வாரங்களுக்குள் முதற்கட்டமாக வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாகவும்,அடுத்த கட்டத்தில் மிகுதி இரு நூறு பேரிற்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றும் தம் மாலோக தேரர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் கடலரிப்பால் வருடாந்தம் 0.3 மீற்றர் நிலப்பகுதி இழக்கப்படுகிறது

## -சுற்றாடலியலாளர்கள் கருத்து

(கொழும்பு)

வருடாந்த கடலரிப்பு காரணமாக சராசரியாக 0.3 மீற்றர் அளவு நிலத்தை இலங்கை இழக்கிறது.

கடற்கரையோரப்பகுதிகள் கடலரிப்பினால் நீரில் மூழ்கடிக்கப்படும் அபாயத்தை எதிர் நோக்கியுள்ளன. இதனால் கடலரிப்பைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென சுற்றாடலியலாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

அதிகமாக அகழ்வு இடம் பெறும் கரையோரப்பகுதிகளில் 8-10 மீற்றர் நிலம் வருடாந்தம் கழுவியடித்துச் செல்லப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கரையோரப் பிரதேசங்கள் பாதுகாப்பு திணைக்களப் பணிப்பாளர். ஆர்.டி.ஏ.பி சமரநாயக்க இது பற்றிக்கருத்துத் தெரிவிக்கையில்;

பொதுவாக கரையோரப் பகுதிக்குத் தேவையான அடையல் துணிக்கைகளையும், வண்டலையும் ஆறுகள் கடல் நோக்கியும் இழுத்துச் செல்லும் இதன் காரணமாக கடல் நீர் மேலதிகமாக கடற்கரை மண்ணை கழுவிச் செல்வதோடு இயற்கையாக தோற்றுவிக்கப்படும் கடற்கரை மணற்குன்றுகளை கழுவிச் செல்கிறதென தெரிவித்துள்ளார்.

அத்துடன் பெரும்பாலாக அகழ்ந்தெடுக்கப்பட்ட மண்கட்டட நிர்மாண தொழில் துறையினராலேயே பயன்படுத்தப்படுகிறது. வருடாந்தம் 8 மில்லியன்கன மீற்றர் மண்கட்டட நிர்மாணத்துறையினருக்குத் தேவைப்படும் பணிகளுக்காக அதேவேளை மேல் மாகாணத்தில் வெவ்வேறு கட்டட நிர்மாணபணிகளுக்கு அவ்வெண்ணிக்கையின் 50 சதவீதம் உபயோகிக்கப்படுகிறதென மேலும் தெரிவித்துள்ளார்.

வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த முந்தல், கற்பிட்டி ஆகிய பிரதேசங்களே கடுமையாகப் பாதிக்கப்பட்டவை என கூறிய அவர், ஆற்றோர அகழ்வுகளைத் தவிர்த்து அவற்றிற்கு மாற்றீடாக கனரயிலிருந்து தொலைவிலுள்ள கடல் பகுதிகளில்அகழ்வுகளை மேற்கொள்ளலாம். இது செலவு கூடிய வழிவகையாயினும் அரசாங்கம், தனியார் கம்பனிகளுடன் இணைந்து செயற்படும் போது அகழ்தலில் ஈடுபடும் தனிநபர்கள் மீது சுமையேற்றப்படுவதைத் தவிர்க்கலாமெனத் தெரிவித்துள்ளார்.

# கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1943 - 05 - 19 | 2004 - 07 - 22 |

அமரர்

## சின்னத்தம்பி கந்தசாமி

(பிரபல சோதிடர்)

**பாலாவோடை, கனபூமி, காரைநகர்**

காரை.எஸ்.கே. சாமி சாஸ்திரியார் ஸ்ரீகிருஸ்ணானந்த சோதிட நிலையம் மதுஷா வீதி தேராவில் என்ற முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட இவர் 22.07.2004 அகால மரணமடைந்த செய்தியைக் கேட்டு அதிர்ச்சியுற்று மனவேதனை அடைந்ததோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எனது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்கி அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்.

செ.விமலாநந்தன்
(மருமகன்)
தமிழீழ காவல்துறை
உறுப்பினர்.

(4850)

# பொலிஸ் துறைக்கு 1000பேர் இணைப்பு

(கொழும்பு)

இவ்வருடம் புதிதாக 1000 பேரை றிசேவ் பொலிஸ் கான்ஸ்ரபிள்களாக சேர்த்துக் கொள்ள இருப்பதாக சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் இந்திராடி சில்வா தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே றிசேவ் பொலிஸ் கான்ஸ்ரபிள்கள் பாலர் கான்ஸ்ரபிள்களாக பதவி உயர்த்தப் பட்டுள்ளதை அடுத்து இவ்வெற்றிடங்கள் தோன்றியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். அதேசமயம் 000 பேரை ஊர்காவற் படைக்கும் சேர்த்துக் கொள்ள இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும்

(கொழும்பு)

கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் மீண்டும் இம்மாதம் 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

விஞ்ஞான, முகாமைத்துவ, வர்த்தக,வாணிப கல்விப்பீடங்களின் மூன்றாவது, நான்காவது, இறுதியாண்டு மாணவர்களின் கற்கைநெறிகள் அன்றைய தினம் ஆரம்பிக்கப்படுமென்றும் சகல பீடங்களினதும் முதலாம் இரண்டாம் வருட கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென்றும் அதன் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| மண்ணில் மலர்வு | விண்ணில் மறைவு |
|---|---|
| 22 - 02 - 1946 | 27 - 06 - 2004 |

அமரர்

## திருமதி இராஜராஜேஸ்வரி வேலுப்பிள்ளை (வேவி)

அன்பை வாரி வழங்கி எமை
பாதி வழியில் மீளாத்துயரில்
ஆழ்த்திவிட்டுச் சென்று விட்ட
எம் தெய்வமே – உங்கள் இன்
முகம் தேடி அலைகின்றோம்.
எமை ஏங்கவிட்டு எங்கு சென்றீர்கள்?
எம் இதயத்தைக் காணிக்கையாக்கி
உங்கள் பாதத்தில் வைக்கின்றோம்.
இறுதிமூச்சு உள்ளவரை உங்கள்
நினைவு தொடரு மம்மா!
ஓம் சாந்தி - சாந்தி - சாந்தி

இன்று (27.07.2004) செவ்வாய்க் கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

740 சிவிக் சென்ரர்,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
குடும்பத்தினர்.


(4841)

# 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

"பாதை திறப்பு" இது பத்திரிகைச் செய்தி
எல்லோர் இதயத்திலும் சமாதானத்தேவதை
ஆக்கிரமிப்பு!
ஆனையிறவு வெளி உப்புக்காற்று
உரைத்தது மாவீரர்கள் பெயர்கள்பல...
அதில் ஒன்று "பாதை திறப்புக்காக
படிக்கட்டு ஆகிவிட்ட சரா என்ற நாமமும்"
கூடவே நினைவுச்சின்னமாக கவசவாகனமும்
விடுதலையின் வீச்சை எடுத்தியம்பியது.

"விலைபேசமுடியாத தலைவன் எமக்குண்டு
ஈழம் வெகு தொலைவில் இல்லை"
என்பதற்கு ஆயிரமாயிரம் மாவீரர்களில்
சரா நீயும் ஒரு சான்று
சாதனை வீரனாகிய உன்னை நினைந்து
சபதம் எடுத்துக் கொள்கின்றோம்.
கல்லறை மீதினிலே...

தகவல்:
தம்பி மாறா
கல்வியங்காடு.



## லெப்.கேணல் சரா

சின்னத்துரை ஜீவராசா
கல்வியங்காடு

பிறப்பு: 1962-04-19
வீரச்சாவு: 1991-07-27

(சி-9955)

# வரலாறு காணாத மலிவு விற்பனை

**கொழும்பு ஜெயா புக் சென்ரரின்** அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.

| | |
|---|---|
| காலம்:- | 2004 ஜூலை 19 முதல் 29 வரை |
| நேரம்:- | தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்) |
| இடம்:- | யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம். |

- சகலருக்கும் இலங்கை நூல்களிற்கு 10% கழிவு வழங்கப்படும்.
- பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழங்கப்படும்.
- மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகள் (ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது 10 பிரதிகள்) கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவாக 20% வழங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள், கல்வியியற் கல்லூரி, பொது நிறுவனங்கள், பிரதேசசபை, நூலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களிற்குக் கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:-
வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-10116)

–“இல. தமிழர் நன்றாக இருந்தால் இந்தியாவுக்கு நல்லது”–

# இந்திராகாந்தியின் கருத்தை மத்திய அரசு கடைப்பிடிக்க வேண்டுகிறார் வை .கோ

(புதுடில்லி)

**இலங்கைப் பிரச்சினையில் மறைந்த முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் அணுகு முறையை மத்திய அரசு கடைப்பிடிக்க வேண்டும் என்று வை.கோ கூறினார்.**



பெங்களூர் தமிழ்ச்சங்கத்தில் ஞாயிற்றுக்கிழமை நடந்த உலகத் தமிழர்பேரமைப்பு மாநாட்டில் கலந்து கொண்டு அவர் பேசிய தாவது, தியாகத்தால் மதிக்கப் படுகிற நிகழ்வுதான் நிலைக்கும். 1983 ஆம் ஆண்டு ஜுலை மாதம் இலங்கையில் நடந்த இனக்கல வரத்தில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். இலங்கையில் கொடுக்கப்பட்ட விலை அதிகம், இழக்கப்பட்ட உயிர்கள் அதிகம் இந்த மாநாட்டில் எந்த சதி ஆலோ சனையும் நடக்கவில்லை.

கருத்துச் சுதந்திரம் சனநாயகத் தின் அடிப்படை தமிழ்மொழிக்கு சாவுகிடையாது 18 ஆண்டுகள் சிறையில் அடைத்தாலும் துணி வோடு இருப்போம். தமிழர்கள் எங்கு சென்றாலும் அந்த மண்ணை வளமாக்கினார்கள் அது கோலார் தங்கவயலிலும் நடந்துள்ளது. நமது கன்னடசகோதரர்கள் நம்மீது வெறுப்புக் காட்டினாலும் அவர் களுடன் பாசத்தை வளர்த்து நடப் போம் காவிரி போன்ற பிரச்சினை கள் காலப்போக்கில் சரியாகிவிடும் இலங்கைத்தமிழர்களைப் பற்றி மக்களவையில் பேசினேன் அதை திருமங்களத்தில் பேசினால் குற்றமா? இந்த வழக்கில் கருத்துச் சுதந்திரத்தை பேசுவதில் தவறில்லை. பேசினால் குற்றமாகாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. இத னால் நான் இலங்கைத் தமிழர்கள் குறித்து தமிழகம், பெங்களூர், மும்பை உட்பட எங்குவேண்டுமான லும் பேசலாம் விடுதலைப்புலிகளை சர்வதேச சமுதாயம் அங்கீகரித் துள்ளது. இலங்கைப் பிரச்சினை யில் அமைதிப்பேச்சில் ஈடுபட்ட நோர்வேஅரசுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். இலங்கையில் தமிழர் கள் நன்றாக இருந்தால் இந்தியா வின் பாதுகாப்புக்கு நல்லது என்று முன்னால்பிரதமர் இந்திராகாந்தி நினைத்தார். இந்தக் கருத்தை தற் போதய மத்திய அரசும் கடைப் பிடிக்கவேண்டும் இலங்கை எப் போதும் இந்தியாவுக்குச் சாதகமாக நடந்ததில்லை. ஆனால் ஈழத்தமிழர் கள் எப்போதும் இந்தியாவுக்குத் தான் சாதகமாக இருந்து வருகின் றனர். இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்தியா ஒத்துழைப்பது பொதுச் செயல்திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளது. இந்தியாவுடன் பாது காப்பு ஒப்பந்தம் செய்து கொள்ள இலங்கை அரசு முயல்வதை இந்தியா ஏற்கக்கூடாது.

ஈழவேந்தன் சென்னை விமான நிலையத்திலேயே தடுத்து நிறுத்தி இலங்கைக்கு திருப்பி அனுப்பப் பட்டுள்ளார்.

இது தவறான முன் உதாரணம் உளவுத்துறை அதிகாரிகளின் இந்த நடவடிக்கை குறித்து பிரதமர் மன்மோகன்சிங்கிடம்பேசுவேன். இனி இதுபோன்ற சம்பவம் நடக் கக்கூடாது இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையை ஈழத்தமிழர்கள் தீர் மானிக்கட்டும். இலங்கையில் போர் மூளக்கூடாது கர்நாடகத் சிறையில் அடைக்கப்பட்டுள்ள பேராசிரியர் நெடுஞ்செழியன், குணசீலன் ஆகியோரை கர்நாடக அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றார் வை.கோ.



பீகார் மாநிலம் சகாரியா நகரில் வெள்ளத்தில் மூழ்கி யுள்ள வீடுகள்

# சாவு அறிவித்தல்

அமரர்

## திரு. ஆசீர்வாதம் அருள்நாயகம்

துன்னாலை கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கிளிநொச்சியில் வசித்து வந்தவரும் சட்டத்தரணியும், நொத்தாரிசுமாகிய திரு. ஆசீர்வாதம் அருள்நாயகம் அவர்கள் 25.07.2004 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களாகிய ஆசீர்வாதம் தவபாக்கியம் ஆகியோரின் சிரேஸ்ர புதல்வரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, பார்வதிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும், குணமணியின் அன்புக் கணவரும், அருள்மணியின் (லண்டன்) அன்புத்தந்தையும், மரியதாஸ் (தபால் அதிபர் யாழ்ப்பாணம்),புஸ்பராசா(துன்னாலை). அருள்ஜோசப் (உடுப்பிட்டி),அருள்தேவரட்ணம் (பிரான்ஸ்), அருள்மலர் தேவி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், டாக்டர் தணிகாசலம்(அவுஸ் திரேலியா) சின்னையா (காங்கேசன்துறை சீமேந்துக் கூட்டுத்தாபனம்),டாக்டர் இரத்தினகோபால் (அவுஸ்திரேலியா), திருமதி சறோஜினி (இந்தியா), சுந்தரலிங்கம் (திருவையாறு),கணேசலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இவரது ஈமக்கிரியைகள் 28.07.2004 புதன்கிழமை பி.ப. 2.00 மணியளவில் தாமரைக்குளத்தடி, துன்னாலை கரவெட்டியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுத் தகனக்கிரியைகள் தாமரைக்குளத்தடி வேருகொண்டல் இந்து மயானத்தில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர் ,நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:- திருமதி குணமணி அருள்நாயகம் (மனைவி)

(4856)

# கல்கத்தா நகர டாக்சிகளில் தொலைபேசி

(புதுடில்லி)

கல்கத்தா நகரில் பயணிகளின் வசதிக்காக டாக்சிகளில் விரைவில் தொலைபேசி வசதி செய்யப்படவுள்ளது

இதற்காக ரிலையன்ஸ் இன் போகாம் நிறுவனத்துடன் ‘வங்காள டாக்சி சங்கம்’ ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. செல்போன் இல்லாத சுற்றுலாப் பயணிகளின் மற்றும் பயணிகள் நலனைக் கருத்திற் கொண்டு இந்த வசதியை கொண்டு வர முடிவு செய்யப்பட் டுள்ளது. துவக்கத்தில் 15 டாக்சிக ளில் மட்டும் இந்த முறை கொண்டு வரப்படவுள்ளது.

## தவறிவிட்டது

சின்னப்பா கந்தசாமி-43 புளோப்பளை பளை என்னும் முகவரி கொண்ட எனது தேசிய அடையாள அட்டை 613314580V கடந்த செவ்வாய்க்கிழமை கிளி நொச்சிக்கும், முகமாலைக்கும் இடையில் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் கிளிநொச்சி பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:-சி.கந்தசாமி (4853)

# ஈராக்கில் கடத்தப்பட்ட மூன்று இந்தியரை விடுவிக்க கடத்தற்காரர் புதிய நிபந்தனை

ஈராக்கில் 3 இந்தியர் உட்பட 7 பேரைக் கடத்திச் சென்றுள்ள தீவிரவாதிகள் தம் நிபந்தனையை நிறைவேற்ற விதித்துள்ள காலக்கெடுவை நீடித்துள்ளதோடு புதிய நிபந்தனைகளையும் விதித்துள்ளனர் இதற்கிடையே அவர்களது கோரிக்கையை ஏற்று, குவைத் நிறுவனம் தனது போக்கு வரத்துப் பணிகளை ஈராக்கில் நிறுத்திவிட்டது.

குவைத்திலும், அமெரிக்காவி லும் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஈராக்கியர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதே அப் புதிய நிபந்தனை கடத்தற்காரர்களின் புதிய நிபந்தனையால் இந்தியப் பிணைக்கைதிகளை விடுவிப்பதில் புதிய சிக்கல் ஏற்பட்டுள்ளது.

தமது கோரிக்கைகளை ஏற்க தீவிரவாதிகள் விதித் திருந்த முன்னைய கெடு திங்கட்கிழமை மாலை முடிவுக்கு வந்துள்ளது. அவர்களது பிடியிலி ருந்து இந்தியக் கைதிகளை விடுவிக்க இஸ்லாமிய மதத தலைவர்களின் உதவியையும் இந்திய அரசு நாடியுள்ளது. “ இந்தியப் பிணைக்கைதிகளை விடு தலை செய்யுங்கள் என தீவிர வாதிகளுக்குக் கோரிக்கை விடுக் குமாறு” சவுதி அரேபியா, குவைத் ஆகிய நாடுகளைச் சேர்ந்த இஸ் லாமிய மதத் தலைவர்களை இந் தியா கேட்டுக்கொண்டிருக்கின்றது. கடத்தப்பட்ட இந்தியர்கள் மூவரும் குவைத்- கல்ப் லிங்க் டிரான்ஸ் போர்ட் கம்பனி என்னும் போக்குவரத்து நிறுவனத்தில் பணியாற்றி வருகின்றனர்.

அந்த நிறுவனம் ஈராக்கில் தமது பணிகளை நிறுத்திவிட்டு வெளியேற வேண்டும் என்று கடத்தற்காரர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். ஈராக்கில் எந்த இடத் திலும் எங்கள் நிறுவனம் பணியில் ஈடுபடவில்லை. ஈராக் மக்களுக் குத் தேவையான பொருட்களைத் தான் எங்கள் நிறுவன வாகனங் கள் ஏற்றிவந்தன. என்று அந்த நிறுவனங்கள் கூறியிருக்கின்றன.


## மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

| | |
|---|---|
| காலம்:- | 01.08.2004 ஞாயிறு பி.ப. 1.00 மணி |
| இடம் :- | கலைவாணி சவாரித்திடல், வட்டக்கச்சி |
| பிரிவுகள்:- | அ, ஆ, இ, ஈ நான்கு பிரிவுகள் (ஈ.பிரிவு கண்டு தரம் அனுமதிக்கப்படும்) |

குறிப்பு:- கிளி-மாவட்ட சவாரி சங்கத்தில் அங்கத்தவர்கள் மட்டும் போட்டியில் கலந்துகொள்ள முடியும்.பிறமாவட்டங்களுக்கு விலக்கப்பட்டுள்ளது.

பிரவேச அன்பளிப்பு:- பத்து (10)

(4646)

தகவல்:
வட்டக்கச்சி, இராமநாதபுரம்

## நியாப் கிளிநொச்சி மாவட்ட காரியாலயத்தினூடாக நடாத்தப்படும் கட்டுரைப்போட்டி

09.08 .2004 அன்று நடாத்தப்படவுள்ள நியாப்-ii தொடர்பான அறிமுக விழாவையொட்டி இப்போட்டி நடாத்தப்படவுள்ளது.

கட்டுரையின் உள்ளடக்கம்: இரணைமடு நீர்ப்பாசனத்திட்டத்தின் கடந்த கால வரலாற்றினையும் தற்போதைய நிலையையும், எதிகால தேவையையும் மையமாகக் கொண்டிருத்தல் வேண்டும.

*.இக்கட்டுரைப் போட்டியில் பாடசாலை மாணவர்களும் பங்குபற்றலாம்.

*.கட்டுரைகள் 300-400 சொற்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

கட்டுரைகள் யாவும் 05. 08. 2004 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பிரதித்திட்டப் பணிப்பாளர், நியாப், கச்சேரி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு தபால் மூலமோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கலாம்.

தெரிவு செய்யப்படும் முதல் மூன்று கட்டுரைகளுக்கு பெறுமதிவாய்ந்த பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

பிரதித்திட்டப்பணிப்பாளர்,
நியாப்,
கச்சேரி,
கிளிநொச்சி.

(4854)

## பொருண்மிய மதியுரையகத்தினால் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில்

## புதிய கணனிப் பயிற்சிநெறி ஆரம்பம்

(மிகவிரைவில்)

கற்கைநெறி

**MS.Office**
Introduction to Computer
Windows
MS.Word
MS.Excel
MS.power Point
MS.Access



தவணைக்கட்டணம்: 500/=

(4852) காலம்: 4 மாதங்கள்

# இங்கிலாந்து–மேற்கிந்தியதீவு முதல்டெஸ்ட்

# இக்கட்டான நிலையில் மேற்கிந்தியதீவு

இங்கிலாந்தின் லோட்சில் நடைபெற்ற இங்கிலாந்து மேற்கிந்திய தீவு அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் இறுதி நாளான நேற்று (ஐந்தாம் நாள்) 477 என்ற வெற்றி இலக்கை நோக்கி ஆடிய மேற்கிந்தியத்தீவு 8 விக்கெட்டுக்களை இழந்து 245 ஓட்டங்களைப் பெற்று இக்கட்டான நிலையில் இருந்தது.

இங்கிலாந்து முதல் இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 568 ஓட்டங்களைப் பெற்றது மேற்கிந்தியத்தீவு தனது முதல் இனிங்சிற்கான சகல விக்கெட்டுக்களையும் இழந்து 416 ஓட்டங்களைப்பெற்றது.

மேற்கிந்தியத்தீவைவிட 152 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்த இங்கிலாந்து தனது இரண்டாவது இனிங்சில் 5 விக்கெட்டுக்களை இழந்து 325 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

இதில் ரெஸ்ட் கொதிக்45, அன்ரூஸ்ரோஸ் 35, ரொபட்ஹி15, மைக்கல்வோன் ஆட்டமிழக்காது 101 ஓட்டங்களைப் பெற்றார். இதனை விட கிரகம்தோப் 38, பிளிண்டொப் 58 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கொலின்ஸ் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதன்படி 477 என்ற வெற்றி இலக்கை நோக்கி ஆடிய மேற்கிந்தியத்தீவு மதியபோசன இடைவேளையின்போது 8விக் கெட்டை இழந்து 243 ஓட்டங் களைப் பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் இரண்டாவது இனிங்சிலும் சந்தர்போல் ஆட்டமிழக்காது 77 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். கிறிஸ்கெய்ல் 81,லாறா44 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.

# வீரர்களின் சாதுரியமற்ற துடுப்பாட்டமே பாகிஸ்தானுடனான தோல்விக்குக் காரணம்


கங்குலி

பாகிஸ்தானுக்கு எதிரான ஆசியக் கோப்பை சுப்பர் லீக் போட்டியில் இந்திய அணியின் சாதுரியமற்ற துடுப்பாட்டமே நாம் தோல்வியடையக் காரணம் என இந்திய அணித்தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

தமது அணி இந்த ஆட்டத்தில் விளையாடிய விதம் மோசமாக இருந்ததாகவும், துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு போன்ற அனைத்து தரப்பிலும் பாகிஸ்தான் மிகச் சிறப்பாகச் விளையாடியதாகவும் கங்குலி கூறினார்.

இதுபோல் ஆடினால் இந்த போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் தகுதிபெற முடியாது எனவும் கங்குலி தனது அணியினருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் பாகிஸ்தானுக்கு எதிரான லீக்போட்டியில் தோல்வி அடைந்தாலும் இப் போட்டித்தொடரின் இறுதிப் போட்டியில் தகுதிபெறும் வாய்ப்பு இந்திய அணிக்கு இன்னும் உள்ளது என்றும்கங்குலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 2005இல் இந்தியா செல்கிறது!

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் என்று இந்திய கிரிககெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் ஜக்மோகன் டால்மியா தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இந்தச் சுற்றுப்பயணம் சனவரி அல்லது பெப்ரவரி மாதம் தொடங்கும் என்றார்.

இதன்போது மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் ஐந்து ஒருநாள் போட்டிகளிலும், பாகிஸ்தான் பங்கேற்கும் என டால்மியா கூறினார்.

போட்டிகளுக்கான திகதிகள் குறித்து இந்திய பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியங்கள் ஆராய்ந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். அதற்கு முன்னதாக பகல் /இரவு ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் போட்டித்தொடரில் இந்தியா பாகிஸ்தான் அணிகள் பங்கேற்க இருப்பதாக டால்மியா தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையில் கிரிக்கெட் உறவுகள் மலர்ந்திருப்பது ஆசிய கிரிக்கெட் வளர்சிக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்றும் டால்மியா தெரிவித்தார்.

# கோபா அமெரிக்க கால்பந்து இறுதிப் போட்டி; பரபரப்பான ஆட்டத்தில் பிரேசில் அணி சம்பியன்

தென்அமெரிக்க நாடுகளுக்கிடையிலான கோபா அமெரிக்க கால்பந்தாட்ட இறுதிப் போட்டியில் பிரேசில் அணி வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

நேற்று அதிகாலை நடைபெற்ற ஆர்ஜன்டீனாவுக்கு எதிரான இறுதியாட்டத்தில் உத்தியோகபூர்வ நேர முடிவின் போது இரு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பெற்றுச் சமநிலையில் இருந்தன. இதனை அடுத்து தண்ட உதை அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் 4-2 என்ற கோல்கள் மூலம் பிரேசில் அணி வெற்றிபெற்றது.

ரொனால்டோ, ரொனால்டினோ,ரொபாட்டோ கார்லொஸ் போன்ற முன்னணி வீரர்கள் இல்லாமல் இளம் வீரர்களுடன் களமிறங்கிய பிரேசில் கோபா அமெரிக்கக் கிண்ணத்தை வென்றதன் மூலம் உலக அரங்கில் தனது ஆதிக்கத்தை மீண்டும் பறைசாற்றியுள்ளது.

ஐந்து முறை உலக சம்பியன் பட்டம் வென்ற பிரேசில் அணியின் வெற்றியை அடுத்து ரசிகர்கள் மகிழ்ச்சிக் களியாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

1993 ஆம் ஆண்டின் பின்னர் பிரேசில் அணி வென்றெடுத்த முதலாவது கோபா அமெரிக்கக் கிண்ணம் இதுவாகும்.





# உலகப் பிரசித்திபெற்ற சைக்கிள் ஓட்டப்போட்டியில் அமெரிக்க வீரர் லான்ஸ் ஆம்ஸ்ரோங் உலகசாதனை

உலக பிரசித்தி பெற்ற ரோதேஹான் சைக்கிள் ஓட்டப் போட்டியில் பிரபல அமெரிக்க வீரர் லான்ஸ் ஆம்ஸ்ரோங் வெற்றி பெற்றுள்ளார்.

ஆறாவது முறையாகச் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியதன் மூலம் ஆம்ஸ்ரோங் உலக சாதனையைப் புரிந்துள்ளார்.

ரோதேஹான் சைக்கிளோட்டப் போட்டி 20 கட்டங்களைக் கொண்டதாகும. 3 வாரங்கள் நீடிக்கின்ற இந்தப் போட்டி மொத்தமாக 3500 கிலோமீற்றர் தூரத்தைக் கொண்டதாகும்.



நேற்று முன்தினம் நடைபெற்ற 20 ஆவதும் இறுதியுமான கட்டமான 163 கிலோ மீற்றர் தூரத்தை உள்ளடக்கியிருந்தது.

இது மொன்ரியல் முதல் பரிசில் வரை யிலான 20 ஆவது கட்டத்தில் பெல்ஜிய வீரர் தொம்மூலன் வெற்றி பெற்ற போதும் ஓட்ட மொத்த வெற்றியை லான்ஸ் ஆம்ஸ்ரோங் தட்டிச் சென்றார்.

இதற்காக ஆம்ஸ்ரோங் 803 மணித்தியாலங்கள் 36 நிமிடம் 2 செக்கன்களை எடுத்துக்கொண்டார்.

இந்த வெற்றியை அடுத்து உலகில் மிகவும் உயரிய சைக்கிள் ஓட்டப் போட்டியாகக் கருதப்படுகின்ற ரோதேஹான் சைக்கிலோட்டப் போட்டியில் ஆறு முறை சம்பியன் பட்டம் வென்ற ஒரே வீரர் என்ற உலக சாத னையை ஆம்ஸ்ரோங் தனதாக்கினார்.


வெற்றிக்களிப்பில் ஜப்பான் அணி வீரர்கள்

# பாதியிலேயே வெளியேறினார் வீனஸ் டேவன்போர்ட் –செரீனா இறுதி மோதல்

லாஸ் ஏஞ்சலீஸில் நடைபெற்று வரும் உலகமகளிர் டென்னிஸ் போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்சை எதிர்த்து லின்ட்சேடேவன்போர்ட் பட்டத்துக்காக மோதுகிறார்.

சனிக்கிழமை அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன.முதல் ஆட்டத் தில் செரீனா 6-3, 7-[illegible] என எலீனா டேமன்டீவாவைத் (ரஷ்யா) தோற்கடித்தார். தரவரிசையில் செரீனா முதல் இடத்திலும் டேமன்டீவா 4ஆவது இடத்திலும் இருந்தனர். டேவன்போர்ட், வீனஸ் வில்லியம்ஸ் ஆகியோருக்கு இடையிலான மற்றோர் அரையிறுதி ஆடடத்தில், டேவன்போர்ட் 7-5, 2-0 என முன்னிலை பெற்றிருந்தபோது, வலது மணிக்கட்டில் காயமேற்பட்டு வெளியேறினார். வீனஸ் தரவரிசையில் வீனஸ் இரண்டாம் நிலையிலும், டேவன்போர்ட் மூன்றாம் நிலையிலும் உள்ளது குறிப்பிடத்தக்கது.



இறுதி ஆட்டத்தில் வீனஸின் தங்கை செரீனாவிடம் டேவன் போர்ட்டின் 'வேகம்' எடுபடாது எனத் தெரிகிறது. தரவரிசையில் செரீனா முன்னிலையில் உள்ளது ஒரு காரணமாக இருந்தாலும் கடந்த 3 ஆண்டுகளில் இருவரும் மோதியதில் 4முறையும் செரீனாவே வென்றுள்ளமை மற்றொரு காரணம். 'கடின தரையில் டேவன் போர்ட் நன்றாக ஆடிவருகிறார். அத்துடன் தாயக மண்ணில் விளையாடுவது போன்று அவர் உணர்கிறார். ஆனா[illegible] சர்வீஸில் அவரை விஞ்சி விடுவது உறுதி. அத்துடன் பந்தை நாலா திசையிலும் விரட்டி அவரைக் களைப்புக்குள்ளாக்கி வெற்றி பெறுவேன்' என நம்பிக்கை கூறியுள்ளார் செரீனா.

# மகாஜனா பழையமாணவர் அணிக்கு எதிரான கால்பந்துபோட்டியில் கிளி – தெரிவு அணி வெற்றி

பிரித்தானியாவில் இயங்கும் மகாஜனா பழையமாணவர் தெரிவு அணிக்கும், கிளிநொச்சி தெரிவு அணிக்குமிடையிலான சினேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி நேற்றுப் பிற்பகல் 4.00 மணியளவில் கிளி.பொதுவிளையாட்டரங்கில் நடைபெற்றது.

தமிழீழ விளையாட்டுத்துறை செயலர் அன்ரன் அன்பழகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து பிரித்தானிய அணியினர் கிளிநொச்சி அணியினருக்குத் தமது வருகையின் நினைவான பரிசினையும், நினைவுக் கேடயத்தையும் வழங்கினர். போட்டிக்கு முன்னதாக வீரர்கள் பிரித்தானிய அணியின் பயிற்றுநர் புவனேந்திரனுக்கும், பிரித்தானிய தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கச் செயலாளர் V.சிறிகெங்காதரனுக்கும் அறிமுகம் செய்து வைக்கப்பெற்றனர்.

இப்போட்டியில் கிளிநொச்சி அணியினர் 1-0என்றகோல் கணக்கில் வெற்றியீட்டினர். சுரேஸ்கோல் போட்டார். இப்போட்டிக்கு பிரதம நடுவராக சிவனேசனும், பக்க நடுவர்களாக வி.சுவிஸ்கரன், ஜெயக்குமார் ஆகியோர் கடமையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து தமிழீழ விளையாட்டுத்துறையின் பிரித்தானிய அணியினருக்கு நினைவுக் கேடயத்தினை வழங்கினர்.

இன்று பிற்பகல் 4.00 மணிக்கு முல்லை. தெரிவு அணிக்கும், பிரித்தானிய அணிக்குமிடையிலான நட்புறவுப் போட்டி முல்லை. பொது விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.


# உழவர் ஒன்றியம் நடாத்தும் ஒன்பது பேர் பங்கேற்கும் கால்பந்து போட்டி நாளை

உழவர் ஒன்றியம் விளையாட்டுக்கழகம் நடாத்தும் இ.பத்மேஸ்வரன் ஞாபகார்த்த 9பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை உழவர் ஒன்றிய விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

நாளைய போட்டி விபரம்

1.சந்திரோதயா (சுர்க்காஸ்) எதிர் லக்கிஸ்ரார் B
2.உருத்திரபுரம்B எதிர் திருநகர் நீலம்
3.பரந்தன் இளைஞர் வட்டம் B எதிர் உதையதாரகை
4.சோலை வி.க எதிர் உருத்திரபுரம் ம.வி
5.ஸ்கந்தா எதிர் இளைஞர் வட்டம்A
6.ஜொலிபோய் B எதிர் உருத்திரபுரம்A
7.சந்திரோதயா பாபு எதிர் விக்னேஸ்வரா அணிகள் மோதுகின்றன.

### சிந்தனைக்கு



சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 27-07-2004
மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com
natham 23ela@yahoo. com
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

## எங்கப்பன் குதிருக்குள் இல்லை!

கொழும்பு நகரின் புறநகர்ப் பகுதியான கொட்டவவில் வைத்து கருணா குழுவின் முக்கியஸ்தர்கள் ஏழுபேரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவருமாக எட்டுப் பேர் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர். கருணா குழுவிலிருந்து அதிருப்தியுற்றவர்கள் இக் கொலைகளைச் செய்துவிட்டு தற்பொழுது விடுதலைப்புலிகளிடம் சரணடைந்துள்ளனர்.

இக்கொலையை யார் புரிந்தார்கள் என்பது ஒருபுறம் இருக்க– இக்கொலைகளானது சிறிலங்கா அரசாங்கம் கருணா தொடர்பாகக் கைக்கொண்ட கொள்கையின் விளைவே ஆகும். அதாவது கருணாவுடன் நெருக்கமான தொடர்பைக்கொண்டிருந்த அரசாங்கம் அதனைத் தொடர்ந்தும் மறுத்தே வந்துள்ளது. ஆனால் தற்பொழுது கொழும்பு புறநகர்ப்பகுதியில் கருணா தரப்பில் முக்கியஸ்தர் சிலரும், புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவரும் கொல்லப்பட்ட விடயத்தில் அரசாங்கத்திற்கு மெல்லவும் முடியாத, விழுங்கவும் முடியாததொரு நிலை ஏற்பட்டுள்ளது எனலாம். சுருக்கமாகக் கூறுவதானால் கருணாவிற்கும், அரசாங்கத்திற்கும் தொடர்பில்லை என்ற கூற்றுக்கள் கேலிக்குள்ளாகியுள்ளது.

முதலில் கொழும்பு நகருக்கு வெளியில் அமைதியானதொரு பிரதேசத்தில் அதாவது மாத வாடகை 11,000 ரூபாவிற்கு ஒரு மாடிவீட்டினை வாடகைக்குப் பெற்று கொள்ளத்தக்கதானதொரு இடத்தில் அதாவது, நெருக்கடியற்ற சிங்கள மக்கள் வாழும் பகுதியில் சுமார் 10 தமிழ் இளைஞர்கள் தங்கியிருப்பதென்பதும், அது சிறிலங்காப் பொலிசாருக்கோ, அன்றிப்புலனாய்வுத் துறையினருக்கோ தெரியாமல் இருந்த தென்பதும்

ஆனால் உண்மையில் இவ் இடத்தெரிவானது எவரும் சந்தேகிக்காத வகையில் கருணா குழுவினைப் பாதுகாக்கும் வகையில் சிறிலங்கா புலனாய்வுத்துறையினரால் தெரிவுசெய்யப்பட்டதாகவே இருத்தல் முடியும். அதாவது சிங்கள மக்கள் மத்தியில் மிகவும் பாதுகாப்பான பகுதி என்ற ரீதியில் இவ் இடத்தெரிவு இருந்துள்ளது.

அடுத்ததாகக் கருணா குழுவினருடன் சுட்டுக் கொல்லப்பட்டவர் இராணுவப் புலனாய்வுத்துறையைச் சேர்ந்தவர் என ஆரம்பத் தகவல்கள் தெரிவித்த அதேவேளை இவர் இராணுவப்புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவரோ, அன்றி வேறு எந்த ஆயுதப்படைத் தரப்பைச் சேர்ந்தவரோ அல்ல என சிறிலங்கா படைத்தரப்பு மறுப்புத் தெரிவித்துள்ளது.

சிறிலங்கா இராணுவத்தரப்பின் மறுப்புக் குறித்து ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில் சிறிலங்கா இராணுவத்தரப்பு பொய் கூறுவதென்பதும், உண்மைகளை ஏற்க மறுப்பதென்பதும் சாதாரணமானதொரு விடயமே. சிறிலங்கா இராணுவம் யுத்த முனையில் இருந்து தப்பி ஓடும் போது கூட இராணுவம் முன்னேறிச் செல்வதாகக் கூறும் ஆற்றல் மிகுந்தவர்கள் சிறிலங்கா அதிகாரிகளில் உண்டு.

அதுமட்டுமல்ல ஆயிரக்கணக்கில் இராணுவத்தினர் இறந்து கிடந்த போது கூட அதனை ஏற்றுக்கொள்ள சிறிலங்கா அரசாங்கம் தயாராக இருக்கவில்லை. புலிகள் ஒப்படைத்த சடலங்களை ஏற்றுக்கொண்டால் படையினருக்கு ஏற்பட்ட பாரிய இழப்பை ஒப்புக்கொண்டதாகிவிடும் என்ற காரணத்தினால் 'தேசத்திற்காக' எனக் கூறிப் போர் முனைக்கு அனுப்பியவர்களின் சடலங்களையே ஏற்கமறுத்த ஆட்சியாளர்கள் இவர்கள்.


இந்நிலையில் 'தம்மிக்க' என்ற ஒரு நபருக்காக–சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையினருக்கும் கருணாவுக்கும் இடையிலான உறவை வெளிப்படுத்திவிட அந்தளவிற்கு அவர்கள் உணர்ச்சி கரமானவர்கள் அல்ல. ஆனால் ' தேசத்திற்காக' கடமைபுரிந்த ஒருவர் அனாதரவானவர் போல் கருதப்பட வேண்டியேற்பட்டது தான் வருத்தத்திற்குரிய தொன்றாகும்.

சனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் கருணா விவகாரத்தில் 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்பது போல் ஆட்சியாளர்கள் காலத்திற்குக் காலம் கூறும் பொய்களும், இடம்பெறும் சம்பவங்களும் கருணா சிறிலங்கா அரசாங்கத்தின் பாதுகாப்பில் இருப்பதையும், ஆசீர்வாதத்துடன் செயற்படுவதற்கு மான ஆதாரங்களை வெளிப்படுத்துபவையாகவே இருக்கும்.

கருணாவிற்குச் சிறிலங்கா அரசாங்கம் பாதுகாப்பு வழங்குவதோ அன்றி வேறு உதவிகளை மேற்கொள்வதென்பதோ தற்பொழுது முக்கியமானதொரு விடயம் அல்ல. ஏனெனில் கருணாவின் அரசியல் பலமென்பதும், இராணுவப்பலம் என்பதும் புரிந்து கொள்ளத்தக்கதே. ஆகையினால் கருணா குறித்து பெரியளவில் அலட்டிக் கொள்ள எதுவுமே இல்லை. ஆனால் சிறிலங்கா அரசாங்கம் கருணாவை வைத்து அரசியல் நடத்த விளைகின்றது என்பது, வெளிப்படுத்தப்படுதல் என்பது தேவையானதாகும். ஏனெனில் இது சமாதானத்திற்கு எதிரான அரசாங்கத்தின் நடவடிக்கை என்பதை நிரூபணம் செய்வதற்கு அவசியமானதாகும்.

# போராளிகளின் நெஞ்சத்தில் வேரூன்றி இருப்பது தமிழ் என்ற சிந்தனை மட்டுமே

### - உலகத் தமிழர் பேரவை மாநாட்டில் சந்திரசேகரன்



போராளிகளின் கைகளில் ஆயுதங்கள் இருக்கலாம். ஆனால் அவர்கள் நெஞ்சத்தில் வேரூன்றி இருப்பது தமிழ் என்ற சிந்தனை மட்டுமேயாகும். துப்பாக்கிக் குண்டு களினால் அவர்களது உடம்பி லிருந்து வெளியேறும் குருதியில் கூட தமிழ் மணம் தான் வீசும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பெங்களூ ரில் நடைபெற்றஉலகத் தமிழர் பேரவை மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே சந்திர சேகரன் இதனைத் தெரிவித்துள் ளார். தமிழ்த் தேசிய இயக்கத்தலை வர் பழ. நெடுமாறன் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் மறு மலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளரும் எம்.பி. யுமான வை.கோ, தமிழ் கூட்ட மைப்பு எம்.பி.மாவை சேனாதிராஜா உட்பட பலரும் கலந்து கொண்ட னர். இங்கு உரையாற்றிய சந்திர சேகரன் மேலும் கூறியதாவது;

உலகத் தமிழர்களையெல் லாம் உணர்வு ரீதியாக ஒன்றி ணைக்க வேண்டுமென்பதில் அக் கறை காட்டியவர்களின் வரலாறு மிக நீண்டது. அதில் தனியான ஒரு இடத்தை தனதாக்கிக் கொண்டவர் மறைந்த தனிநாயக அடிகளார். அவரை ஈன்றெடுத்த ஈழபூமி அமைந்திருக்கும் இலங்கை நாட்டி லிருந்து நான் வந்து கலந்து கொள் வது எனக்கு கிடைத்த மிகப்பெரும் வாய்ப்பாகும் என கருதுகிறேன். அரசியல் ரீதியாகவும், இன எழுச் சிக்காகவும், தொடர்ச்சியாக தூய பணியாற்றிவரும் பழ நெடுமாறன் அவர்களின் விடா முயற்சியோடு தொடருகின்ற சேவையைக் கண்டு வியக்கின்றேன். பாராட்டுகின்றேன், வணங்குகின்றேன். உலகமெங்கும் தமிழர்கள் பரந்து வாழ்ந்து வருகி றார்கள் என்பது பெருமைக்குரியது தான். ஆனால் சிதறி வாழும் இந்த தமிழர்கள் தமது தனித்துவத்தை எந்தளவுக்கு பாதுகாத்து, வளர்த் துக்கொண்டிருக்கிறார்கள் என்பது அச்சத்தை ஏற்படுத்துகின்ற கேள்வி யாக அமைந்துள்ளது. இந்த கேள்விக்குறியை ஆச்சரியக்குறி யாக மாற்றுவது ஒன்றும் இயலாத காரியமில்லை. ஆனால் அதற்கு என்ன செய்யப்போகிறோம்? எப்படி செய்யப் போகிறோம்? என்ற ஆதங்கத்தில் கூடியுள்ளவர்களின் கூட்டமாகத்தான் இந்த பேரவை யின் மாநாட்டில் கூடியிருப்பவர் களை நான் பார்க்கின்றேன். நமது தமிழினத்தின் அடையாளம் அழிந்துவிடக்கூடாது என்பதில் அனைவரும் அக்கறையோடு செயற்பட்டாக வேண்டிய காலத் தின் கட்டாயம் ஏற்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன். தமிழ்நாடு எனப பெயர் வைத்தோம். தமிழ் மொழி செம்மொழி என்ற அங்கீகாரத்தை பெறுவதில் வெற்றி இலக்கை நோக்கி நகர்ந்து விட்டோம். ஆனால் தமிழ்நாட்டில் கூட தமிழ் மொழிப் பிரயோகம் தேய்கிறதா, வளர்கிறதா என்பதில் இன்றும் எனக்கு தெளிவில்லை. இதனை ஆய்வாளர்களும், தமிழ் அறிஞர் களும் தான் தீர்மானிக்க வேண் டும். தமிழ்நாட்டுக்கே இந்த நிலை யென்றால் உலகமெங்கும் சிதறி வாழுகின்ற தமிழர்கள் தங்களு டைய தனித்துவத்தை காப்பார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம். தமிழ்மொழியின் எதிர்காலத்திற்கு ஆபத்துக்கான அடையாளம் தெரிகின்ற இந் நேரத்தில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி தான் நமது மொழிக்கும் இனத்திற்கும் அபாயம் தருகின்ற ஒன்றாக அமையும் என ஆறுதல் அடைகிறேன். வளர்ந்து முதிர்ந்த மரங்களை விட கன்று களைப் பாதுகாப்பதில் தான் கவ னம் அதிகம் தேவை என சீன பழமொழி கூறுகின்றது. இவ்வகை யில் வயது முதிர்ந்தவர்களிடம் மொழியின் தொன்மையைப் பற்றியும், செம்மையைப்பற்றியும் பேசிக்கொண்டிருப்பதை விட நமது குழந்தைகளான அரும்புகளிடம் தமிழின் அருமையை புரிந்து கொள்ளவைக்க புதுவழி தேட வேண்டும் எனத் தெரிவித்தார்.

# சிறிலங்காவில் புதிய படைத்துறையாக சிறப்பு கடல் அதிரடிப்படை ஆரம்பம்

சிறப்பு கடல் அதிரடிப்படை எனப்படும் புதிய சிறிலங்கா படைத் துறை ஒன்று புதிதாக ஆரம்பிக் கப்பட்டுள்ளதாக சிறிலங்கா கடற் படை வட்டாரங்கள் தொவித்துள்ளன.

நவீன கனரக ஆயுதங்களுடன் அமைந்த இக்கடற்படை கடலில் இருந்து தரைக்குச் சென்று தாக் கும் ஆற்றல் கொண்டதெனவும், உலகில் உள்ள சிறப்பு படைத் துறைகளுக்கு சமபலம் கொண்ட தெனவும் சிறிலங்கா கடற்படை அதிகாரி தயா சந்தகிரி தெரிவித் துள்ளார். இப்புதிய கடற்படையின் சாகச நிகழ்ச்சிகள் திருகோண மலை கடற்படை தலைமையகத் தில் அண்மையில் இடம்பெற்றுள் ளது. கடற்படை அதிகாரி தயா சந்தகிரி உள்ளிட்ட முக்கிய படைத் துறை அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில், கறுப்பு நிற சீருடையுடனும், நவீன கனரக ஆயுதங்களுடனும் கூடிய இச்சிறப்புக் கடற்படையினர் தமது சாகசங்களைச் செய்து காட்டியுள் ளனர். இதேவேளை, சர்வதேச கடல் பாதுகாப்புத் தொடர்பாக சர்வ தேச கடற்படை அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்கென கடற் படைத் தளபதி தயா சந்தகிரி லண்டனுக்கு விஜயம் செய்துள் ளார். சர்வதேச நாடுகளின் கடற் படைகள் அங்கம் வகிக்கும் சர்வ தேச கடற்பாதுகாப்பு அமைப்பின் அழைப்பின் பேரிலேயே இவர் லண்டனுக்கு வந்துள்ளார். இவருடன், கடற்படை அதிகாரி ஜெயந்த பெரேரா, கடற்படை நடவடிக்கைகளின் இயக்குனர் டுலிப் விஜேசேகரவும் லண்டனுக்குச் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது. International merine organzation எனப்படும் இவ்வமைப்பு, 2000 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி அமெரிக்காவின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து, கடல் வழியான தீவிரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்து வதற்கென அமைக்கப்பட்ட ஒரு அமைப்பென்பது குறிப்பிடத்தக்கது.

# டக்ளசின் அமைச்சிற்கு இடம் கொடுத்தது வாடகை ஒப்பந்தத்தை மீறும் செயலர்

### - கட்டட உரிமையாளர் அரசாங்கத்திற்கு அறிவிப்பு

சிறிலங்காவின் உல்லாசப் பய ணத்துறை அமைச்சு இயங்கி வரும கட்டடத் தொகுதியில் டக்ளஸ் தேவானந்தாவின் இந்து கலாசார அமைச்சுக்கு இடம் வழங்கப்பட் டமை தொடர்பாக அக்கட்டடத்தின் உரிமையாளர் எதிர்ப்புத் தெரிவித் துள்ளார்.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது காரி யாலயத்தை அனுரா பண்டார நாயக்கவின் அமைச்சுக் கட்டடத் திற்கு மாற்றியதன் காரணமாகவே இப்பிரச்சினை எழுந்துள்ளது. உல்லாசப் பயணத்துறைக்கு மாத்தி ரமே அனுமதிக்கப்பட்டுள்ள தனது கட்டடத் தொகுதியில் இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சுக்கு இடம் வழங்கப்பட்டமை காரண மாக, தனது கட்டடத் தொகுதிக்கு கடுமையான பாதுகாப்பு அச்சுறுத் தல் ஏற்பட்டுள்ளதாக கட்டட உரிமையாளர் தெரிவித்துள்ளார். இவ்விகாரம் அக்கட்டடத்தை வாட கைக்கு பெறுவது தெடாடர்பாக தனக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மீறும் செயலெனவும் சுட்டிக்காட்டியுள்ள கட்டட உரிமை யாளா, குறித்த கட்டடத் தொகுதியில இருந்து உல்லாசப் பயணத் துறை அமைச்சு வெளியேறிச் செல்லுமா றும் உல்லாசப் பயணத்துறை அமைச சிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# அரசுடன் இணையும் தகவலில் எதுவித உண்மையும் கிடையாது

### - ஹெல உறுமய அறிவிப்பு

ஜாதிக ஹெல உறுமய கட்சி ஆளும் ஐ.ம.சு முன்னணியுடன் இணைய உள்ளதாக வெளிவந்த செய்தியில் எவ்வித உண்மை யுமில்லை என கட்சியின் செயலரான உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்துள்ளார்.

எனினும்தேர்தலில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் இருந்து மாறிவிடாமல் நாட்டின் இறைமையைப் பாதுகாக்கவும், அபிவிருத்தி செய்யவும் பௌத்த மதத்தைப் பேணவும் அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு இடையூறின்றி ஒத்துழைப்பு வழங்குவதில் பின்னிற்க மாட்டோமென அவர் தெரிவித்துள்ளார். அரசின்மேற்படி நடவடிக்கைகளில் ஜாதிக ஹெல உறுமயவும் பங்காளர்கள் என்றும் கூறிய அவர், ஒரு போதும் அரசுடனோ எதிர்க் கட்சியுடனோ கைகோர்க்கப் போவதில்லை என்றும் கூறியுள்ளார்.

## தற்போதைய....

கலந்துரையாடவுள்ளோம். அத்துடன் நாளை (இன்று) சனாதிபதியை சந்திக்கவுள்ளோம். போர் நிறுத்த உடன்படிக்கையை பலவீனப்படுத்தும் தற்போதைய சம்பவங்கள் பாரதூரமானவையாகும். அரசாங்கத் தரப்பினருடனும் இது குறித்துப்பேசவுள்ளோம். பொதுவான பேச்சுக்களின் தாற்பரியத்தை இருதரப்பும் புரிந்து கொள்ளவைப்பதே எமது நோக்கமாகும். இதேவேளை தற்போது காணப்படும் ஸ்திரமற்ற காரணிகளைச் சாதகமான முறையில் இருதரப்பும் அணுகாவிட்டால் சிறிய சம்பவங்கள் கூடப் பாரதூரமான விளைவையே ஏற்படுத்தக் கூடும்.

நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது நாட்டின் பாதுகாப்பிற்கு ஏற்பட்டுள்ள இடையூறு பற்றிக் கலந்துரையாடினோம்.நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்ற கொலைகள் பற்றியும் கலந்துரையாடினோம். இச்சம்பவம் தொடர்பாக போதிய ஆதாரங்கள் நிலைநாட்டப்படும் வரை கருத்துக்கள் கூறுவது முடியாத காரியம் எனத் தெரிவித்தார். அத்துடன் சமாதான முயற்சிகளில் இந்தியா ஈடுபாடு கொள்வது தொடர்பாக கேட்கப்பட்டதற்கு இது குறித்து முன்னர் ஊடகம் ஒன்றிற்கு கருத்துக் கூறியுள்ளேன். சமாதான முன்னெடுப்புக்கள், பேச்சுக்கள் கலந்துரையாடல்களின் விபரங்கள் அவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். விடுதலைப்புலிகளின் பொறுமை பற்றி மகிழ்ச்சி கொள்கிறீர்களா? எனக் கேட்டதற்கு போர் நிறுத்த உடன்பாட்டை மதித்து அவர்கள் நடப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன் என்று கூறினார்.

## கூட்டுறவாளர் விழா

82 ஆவது அனைத்துலக கூட்டுறவாளர் தின விழா நாளை மன்னார் மாவட்டத்தில் நடைபெறவுள்ளது. மாலை 2.00 மணியளவில் நானாட்டான் பரிகாரிகண்டல் பாடசாலை மைதானத்தில் நடை பெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரச அதிபரும், தமிழீழ நிர்வாகசேவை பொறுப்பாளரும் கலந்து கொள்வர்.

## கொழும்பில்...

கிக் கொள்ளப்பட்டது. மக்கள் சட்டவிரோத செயல்கள் தொடர்பில் காவல்துறையினருக்கு தகவல் கொடுப்பதற்காக ஏற்கனவே இருந்த 19 என்ற இலக்கங்களுக்குப் பதிலாக 119 என்ற இலக்கங்களை அறிமுகப்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. திடீர் வீதித் சோதனைகளை மேற்கொள்ளல், ஒரு நாள் கடவுச்சீட்டுக்களை விநியோகிக்கும் போது கவனமான செயற்பாட்டை எடுத்தல் போன்ற தீர்மானங்களும் இன்றைய கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன. சட்டம் அரசியலமைப்புக்கு உட்பட்ட வகையில் கடல், மற்றும் தரை வழிப்பாதுகாப்பை உறுதிப்படுத் துவது என்ற முடிவும் இந்த கூட்டத்தில் மேற் கொள்ளப்பட்டது. (32)

## மட்டு...

வெடி ஒன்று வெடித்ததில் மூன்று சிறுவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று மாலை நடந்த இந்தச் சம்பவத்தின் போது ரின்மீன் போன்று காணப்பட்ட ஒரு பொருளை எடுத்துக் கல்லில் குத்தியபோது அது வெடித்துச் சிதறியதிலேயே இவர்கள் காயமடைந்துள்ளனர்.

ரவிச்சந்திரன் நிவேதா (வயது8) ஆறுமுகம் கோகுலன் (வயது12) ஆறுமுகம் நிருபா (வயது8) என்பவர்களே படுகாயமடைந்தவர்களாவர்.

## விவசாயிகள்...

பாதிக்கப்படாதவாறும் அவர்களது உற்பத்தி தடைப்படாதவாறும் அவர்களது தேவைக்கு ஏற்ப விற்பனை செய்வதற்குமாக ஒரு கிலோ இறைச்சியின் விலை 85 ரூபாவாக அதிகரித்துள்ளனர். அத்துடன் மாட்டின் எடை சர்வதேச அளவுத்திட்டத்திற்கு அமைய நிறுக்கப்பட வேண்டும் எனவும் முடிவு எடுக்கப்பட்டது. இந்த விற்பனைகள் யாவற்றையும் கற்பகம் வாணிபத்தின் ஊடாக மேற்கொள்ளலாம் எனவும் கூறப்பட்டுள்ளது. மற்றும் கால்நடைகளின் நோயினைக் கருத்தில் கொண்டு எமது கட்டுப்பாட்டு பகுதிக்கு வெளியே கொண்டு செல்வதோ அல்லது வெளிமாவட்டத்தில் இருந்து எமது மாவட்டத்திற்குள் எடுத்து வருவதோ தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இறைச்சிக்காக மாடுகளை கால் வாய் நோய் நீங்கிய பின்னர் தாம் அறிவித்த பின்னரே விற்பனை செய்யலாம் என அறிவித்துள்ளனர்.

அதேபோன்று பால் உற்பத்தியாளருக்கு இதுவரை இருந்து வந்த தீர்வை விலை நீக்கப்பட்டுள்ளது என்றும் அறிவித்துள்ளனர். அதேபோல் முடிவாக விவசாயிகளின் உற்பத்திப் பொருட்கள் சந்தைப்படுத்துவதில் ஏற்படும் பிரச்சினைக்கும் முடிவு எடுக்கப்பட்டது விற்பனை விலையினைச் சரியான முறையில் கையாண்டு அதற்குரிய தீர்வை விலையினை அறவிடும்படி கேட்டுக் கொண்டுள்ளனர். அதே நேரம் வவுனியாவிற்குள் உற்பத்திப் பொருட்களை கொண்டு செல்வோர் வவுனியாவில் என்ன விலை விற்கப்படுகின்றதோ அதற்கேற்ப தீர்வை விலையினை அறவிடும்படியும் வேண்டியுள்ளனர். நவ்வி, குஞ்சுக்குளம் போன்ற இடத்திலுள்ள விவசாயிகள் தீர்வை வரி கட்டுவதற்காக ஒரு கிலோ மீற்றர் சென்று அங்கு வரி கட்டிய பின்பே வவுனியா கொண்டு செல்கின்றனர் அதனை நீக்கி இப்போது சேமமடு திருப்பம் வழியிலேயே வரி அறவிடப்படும் எனவும் அப்பகுதி விவசாய மக்களுக்கு அறிவித்துள்ளனர். அடுத்து நெல்லினுடைய உற்பத்தி விலையினை கொள்வனவாளர்களும் உற்பத்தியாளர்களும் பாதிக்காதவாறு உத்தரவாத விலை தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனை விவசாய அமைப்புக்களும், அது தொடர்பான அமைப்புக்களும் கொள்வனவு செய்யும் நிறுவனங்களும் ஆகக்குறைந்த விலையினைவிட குறைவாக கொள்வனவு செய்யாமல் அதற்கு கூடிய விலை எவ்வளவிற்கும் கொள்வனவு செய்யலாம் எனவும் அறிவித்துள்ளனர்.

அடுத்து இக்கலந்துரையாடல் மூலம் சூழல் பாதுகாப்பு தொடர்பாகவும் சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளது. அதாவது பொலித்தீன் பாவனையினை முற்றாக தடை செய்து அதற்கு பதிலாக மாற்று பொருளாக கடதாசியில் ஒட்டப்பட்ட பையினை பயன்படுத்துமாறும் அதற்காக சில சிறுகைத் தொழில் நிறுவனங்களை உருவாக்குவதாகவும் முடிவு எடுக்கப்பட்டது. அடுத்து நன்னீர் மீன் பிடியாளர்களுக்கு போடப்பட்டிருந்த வரி முற்றாக நீக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு நிதித்துறையினால் கடனாக வழங்கப்பட்ட மீன் பிடி உபகரணங்களுக்கு மாத்திரம் பணம் அறவிடப்படும் எனவும் தெரிவித்துள்ளனர். அத்தோடு நன்னீர் மீன் பிடியினை ஊக்குவிப்பதற்காக புதிய நடைமுறைகளை மேற்கொண்டு வருவதாகவும் அதற்குரிய வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் தெரியப்படுத்தியுள்ளனர். மேற்கண்ட பல ஆக்க பூர்வமான முடிவுகளை மக்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்களுடன் கலந்து ஆலோசித்த பின்னரே மக்களுக்கு இவ் நடைமுறைகளை தெரியப்படுத்தியுள்ளனர். இதனைச் சம்பந்தப்பட்ட மக்கள் கருத்தில் கொண்டு அதற்கேற்ப தமது நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (சோ.கு)

## அரச...

சபை பற்றிப் பேசுவதும் அது பற்றிய முடிவு கள் எடுப்பதும் அதனை நடைமுறைப்படுத்துவதும் சம்பந்தமான பேச்சுக்களை தொடங்குவதும், யுத்த நிறுத்த உடன்பாடு சம்பந்தமான விடயங்கள் பேசுவது தான் முக்கியமாக இன்றைய நிலைப்பாடாக இருப்பதை நாம் வலியுறுத்தியிருக்கின்றோம்.

*எப்போது பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் என்பது பற்றி அரசதரப்பில் இருந்து ஏதாவது தெரிவிக்கப்பட்டதா?*

இன்று அரச தரப்பில் இருந்து அவர்கள் எந்த தகவலும் கொண்டு வரவில்லை. ஏற்கனவே எமது தேசியத் தலைவர் அவர்களை நோர்வே வெளிவிவகார அமைச்சர் சந்தித்தபோது நாம் முன்வைத்த நிலைப்பாட்டில் நாம் எந்த மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை. அந்த நிலைப்பாட்டில் நாம் மிகவும் உறுதியாகவும், தெளிவாகவும் இருக்கின்றோம் என்பதை மீண்டும் வலியுறுத்தி தெளிவுபடுத்தியுள்ளோம். அவர்கள் அரச தரப்புடன் பேசி அவர்களின் நிலைப்பாடுகளை அறிந்து தான் பின்னர் அவர்களின் நிலைப்பாட்டை வெளியிடுவார்கள்.

*சமாதான முயற்சிகளில் எந்த வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றே கூறப்படுகின்றது. இந்த நிலையில் இடம் பெற்ற இரண்டு சந்திப்புக்களின் பின்னர் சமாதான முயற்சிகளில் எந்தளவில் நம்பிக்கையிருக்கிறது?*

எங்களைப் பொறுத்தவரையில் வெளிப்பார்வை மட்டுமல்ல சமாதான முயற்சிகளில் எந்த முன்னேற்றமும் இல்லை என்பது தான் உண்மையானதும் உறுதியானதும் ஆகும். அவற்றை நாங்கள் இன்று தெளிவாக முன்வைத்திருக்கின்றோம். இந்த இரண்டரை வருட காலமாக மக்கள் சமாதான முயற்சிகளில் முழுமையாக ஏமாற்றம் அடைந்திருக்கின்றார்கள். என்பதை நாம் இன்று தெளிவுபடுத்தியிருக்கின்றோம் ஆகவே சனாதிபதி அவர்கள் ஆக்கபூர்வமாக முழு அர்ப்பணிப்போடும், நேர்மையுடனும் தன்னுடைய நிலைப்பாட்டை முன்வைத்துக் கொண்டு இந்தப் பேச்சுக்களுக்கு வருவதுதான் பொருத்தமானது. ஏனெனில் இந்த ஆட்சிப் பீடத்தில் இருக்கின்ற அமைச்சர்கள் அவர்களுடைய பங்காளிக்கட்சிகள் மத்தியில் சமாதானத்திற்கு விரோதமான கருத்துக்கள் தான் வெளிப்பட்டுக்கொண்டு இருக்கிறது. சனாதிபதியும் அவ்வப்போது தனது நிலைப்பாடுகளை மாற்றிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையை நாம் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

*சமாதான முயற்சியில் அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகள் குறித்து வெறுமனே அதிருப்தி தெரிவிப்பதும் அது பற்றிய உங்களுடைய கருத்துக்களை தெரிவிப்பதும் மாத்திரமே தொடர்ந்துகொண்டிருக்கின்றது. இப்படியே நிலைமை எவ்வளவு காலத்திற்குத் தொடரப்போகிறது.*

அனுசரணையாளர்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் நாங்கள் எங்களது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டிய கடப்பாடு எமக்கிருக்கிறது. இன்று அவற்றை நாங்கள் தெளிவுபடுத்தியிருக்கிறோம். எதிர்காலத்தில் ஏற்படுகின்ற நிலைமைகளுக்கு ஏற்ப எமது தலைமைப்பீடம் தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் என்று தான் நான் நினைக்கின்றேன்.

*யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் நிலைமை இப்போது எப்படி இருக்கின்றது?*

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைப் பொறுத்த வரை அது இப்போது நடைமுறையில் இருக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று புதிதாகத் தோன்றியுள்ள ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள் தான் இன்று யுத்த நிறுத்த உடன்படிக்கையைக் கேள்விக்குறியாக்கியிருக்கின்றது. இதனை நாம் கண்காணிப்புக்குழுத் தலைவரிடமும், துணை வெளிவிவகார அமைச்சரிடமும் கூறியிருக்கின்றோம்.

*இந்த நிலைமையில் விரைவில் ஏதாவது மாற்றங்கள் ஏற்படும் என நீங்கள் நம்புகிறீர்களா?*

தற்போது நடந்த சம்பவங்கள் உங்களுக்குத் தெரியும். ஆயுதக் குழுவாக தேசவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் மத்தியிலேயே தற்போது மோதல்கள் உருவாகியிருக்கின்றது. அதனுடைய வெளிப்பாடாக நேற்றைய சம்பவத்தை நீங்கள் பார்க்கலாம். அவர்கள் மத்தியிலேயே முரண்பாடு தோன்றி அவர்கள் மத்தியிலேயே மோதலாக மாறி இன்று இறந்துகொண்டிருக்கிறார்கள். இது தொடர்பாகவும் நாம் இன்று சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

*கிழக்கு மாகாணத்தில் நாளாந்தம் கொலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. யுத்த காலத் திலும் பார்க்க அங்கே வன்செயல்கள் கூடுதலாக இடம் பெறுகின்றது. இதனை நிறுத்துவதற்கு அரச தரப்பில் இருந்து எந்த நடவடிக்கைகளும் எடுத்தபாடாகத் தெரியவில்லை. இந்த நிலையில் இதனை நிறுத்த வேண்டிய பொறுப்பு விடுதலைப் புலிகளுக்கும் இருக்கிறது. இந்த வகையில் உங்களது நடவடிக் கைகள் எந்தளவில் வெற்றியளித்திருக்கிறது?*

எங்களைப் பொறுத்தவரையில் நாம் அவர்களிடம் தெளிவாக ஒரு விடயத்தை கூறியிருக்கின்றோம். அதாவது படைத்தரப்பின் ஆதரவின்றி அங்கே ஆயுதக்குழுக்கள் செயற்படுவது கஷ்ரமான காரியம். ஏனெனில் கடந்த இரண்டரை வருடங்களில் அங்கே ஆயுதக் குழுக்கள் கட்டுப்படுத்தப்பட்டதன் காரணத்தால் தான் அங்கே யுத்த நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்த முடிந்தது. அண்மைக்காலத்தில் புதிதாகத் தோன்றியுள்ள ஆயுதக் குழுக்களின் நடவடிக்கை நிச்சயமாக படைத்தரப்பின் ஆதரவுடன் தான் செயற்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கைகள் அங்கு சுமுகநிலையை சீர்குலைத்து யுத்த நிறுத்த உடன்படிக்கையை கேள்விக்குறியாக்கியுள்ளது. ஆகவே இதற்குப் படைத்தரப்பின் ஆதரவு வழங்கும் போக்கை மாற்றியமைக்க வேண்டும். விரைவிலே இதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும் என்பதை நாம் படைத்தரப்பிற்கும், கண்காணிப்புக்குழுவிற்கும் அனுசரணையாளர்கள் ஊடாக வெளிப்படுத்திவருகின்றோம். எங்களைப் பொறுத்தவரையில் நாங்களும் இதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான தீவிர கரிசனையை கொண்டிருக்கின்றோம். எமது தலைமைப்பீடம் இதுசம்பந்தமான பல நடவடிக்கைகளை முடுக்கி விட்டிருக்கிறது.

*இப்போதய அரசியல் சூழ்நிலையில் மற்றும் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் செயற்பாடுகள் போன்றவற்றில் மக்கள் நம்பிக்கை இழந்திருக்கிறார்கள். அவ்வாறு நம்பிக்கை இழந்து வருகின்ற தமிழ் மக்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?*

எங்களுடைய மக்கள் சரியாகவும், உன்னிப்பாகவும் அரசியல் நகர்வுகளையும் செயற்பாடுகளையும் கவனித்து வருவதால் அவர்கள் தெளிவாகச் சிந்திப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். ஆகவே எங்களுடைய மக்கள் சுதந்திரமாகவும், தெளிவாகவும் புரிந்து கொள்வதற்கும் சிந்திப்பதற்கும் நான் எந்தக் கருத்துக்களும் கூறவிரும்பவில்லை. அவர்களுடைய தெளிவும், தெளிவான சிந்தனையும் அவர்களது நடைமுறைகளும் தெளிவாக இருக்கின்றது. அதனை நான் வரவேற்கின்றேன். எங்களைப் பொறுத்த வரையில் நாங்களும் அதேநிலையில் தான். மக்கள் எதைச் சிந்திக்கிறார்களோ அதைப்போன்ற சிந்தனையும் அதனுடைய வெளிப்பாடாகவும் எமது கருத்துக்கள் அமைந்திருப்பதை நீங்கள் இணைத்துப்பார்க்கலாம்.

* *அவர்களுடைய சந்தேகத்தை நீங்கள் ஆமோதித்திருக்கிறீர்களா? என்று நாம் நம்பலாமா?*

நிச்சயமாக ----- மக்களுடைய சந்தேகங்களும், மக்களின் நிலைப்பாடுகளும் சரியானது. ஏனெனில் தமிழீழ விடுதலைப் புலிகளினுடைய தலைமையைப் பொறுத்தவரையில் எமது மக்களுடைய அபிலாசைகளைப் பிரதிபலிக்கின்ற அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அமைப்பாகவே அதன் தலைமையாகவே எமது விடுதலை அமைப்பு இருக்கின்றது.

இந்த வகையில் மக்களுடைய நிலைப்பாட்டை நாம் முழுமையாக ஏற்றுக்கொள்கின்றோம். மக்களுடைய நம்பிக்கையீனங்கள், மக்களுக்கேற்பட்டுள்ள விரக்தி சம்பந்தமாக நாம் அனுசரணையாளருடாக சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றோம். ஆகவே எதிர்காலத்தில் ஆக்கபூர்வமான முடிவொன்றை எமது தலைமைப்பீடம் எடுக்கும் என்று தான் நான்கருதுகின்றேன்.

* *விடுதலைப்புலிகள் விட்டுக்கொடுப்புக்களைச் செய்து சமாதானப் பேச்சுகளுக்கு வரவேண்டும் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. விட்டுக்கொடுப்பதற்கு இனியும் ஏதாவது உள்ளதா? இதுபற்றி உங்கள் கருத்து என்ன?*

விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் விட்டுக்கொடுப்புக்கள் என்ற சொற்பதம் பொருத்தமானதாக நாங்கள் நினைக்கவில்லை. ஏனென்றால் விடுதலைப் புலிக்ளிடம் விட்டுக்கொடுப்பதற்கு ஒன்றுமில்லை. எங்களுடைய மக்களது உரிமைகளுக்காகவும், மக்ளின் அபிலாசைகளுக்காகவும் விடுதலை அமைப்பு நீண்டபல வருடங்களாகப் போராடி வருகின்றது. அந்த அடிப்படையில் எமது மக்களது அபிலாசைகளையும், அவர்களது நிலைப்பாடுகளையும் முன்வைப்பதில் நாங்கள் எந்த விட்டுக்கொடுப்புக்களையும் செய்ய முடியாது. ஆகவே எங்கள் மக்களின் நிலைப்பாட்டை நாங்கள் தெளிவாக வலியுறுத்தி வருவோம். அதற்காக நாம் தொடர்ந்து போராட்ட முன்னெடுப்புக்களை முன்னெடுத்து வருகின்றோம்.

* *முதல் தடவையாக ஜெயந்த தனபால நியமனத்தின் பின்னர் ஏதாவது முன்னேற்றம் இருப்பதாக நீங்கள் கருதுகிறீர்களா?*

எங்களைப்பொறுத்த வரையில் முன்னேற்றங்களை இன்றைய சந்திப்பில் காணமுடியவில்லை. ஏனென்றால் அரசதரப்பினுடைய எந்தநிலைப்பாடுகளையும் அவர்கள் இன்று தெளிவாக முன்வைக்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையின் நிலைப்பாடுகளைத்தான் இன்றைக்கு தெளிவாக அவர்களிடம் முன்வைத்திருக்கின்றோம். அவர்கள் அரச தலைமையோடு பேசியதன் பின்னால் தான் நாங்கள் இதனுடைய முன்னேற்றம் எந்த வகையில் அமைந்திருக்கிறது என்பதை வெளிப்படுத்தலாம் என்றார்.

நேற்றுக்காலை 10.00மணியளவில் விசேட உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சியை வந்தடைந்த நோர்வேக் குழுவினரை அரசியற்துறைதுணைப் பொறுப்பாளர் தங்கன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் கைலாகுகொடுத்து வரவேற்றனர்.

தொடர்ந்து 10.45மணிக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறை நடுவப் பணியகத்தில் ஆரம்பமான இச் சந்திப்பு 12.30மணிவரை நீடித்தது.

மேற்படி சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பாக தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் ப.நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், சமாதானச் செயலகத்தைச் சேர்ந்தவர்களான செல்வி, ஜோர்ஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நோர்வேத் தரப்பினர் சார்பாக நோர்வேயின் பிரதிவெளி விவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன், நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்பிரஸ்கர் உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டனர். (லோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு யூலை மாதம்27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.